உ
கடவுள்துணை.

செந்தமிழ்.

தொகுதி உ௩.] குரோதனஸூ ஆடிமீ [பகுதி ௯.
Vol. XXIII. July-August-1925. No. 9.

முத்தரையர் சரித்திரம்.

I. முன்னுரை.

உலகந் தோன்றி நீரும் நிலனுமாய்ப் பிரிந்து, நிலம் மேட்டுபூமியும், மலையும், பள்ளத்தாக்கும், கடற்கரையுமான தன்மையை அடைய அவ்விடங்களில் மரஞ் செடி கொடி புல் பூண்டு முதலிய தாவரங்கள் முளைத்தன; மிருகங்களும் பறவைகளும் உண்டாயின; பிறகு மக்கள் தோன்றினர். அவர்கள் உண்ண உணவும், உடுக்க உடையும், உறங்க உறையுளுமின்றி அங்கு மிங்கும் அலைந்து திரிந்து மிருகங்களின் இறைச்சியைத் தின்றும், அவற்றின் தோலைப் போர்த்தும் காலங்கழித்தனர்; அதன் பின்னர் உறங்கக் குடிசையமைத்துக்கொண்டு படிப்படியாய் உயர்ந்து உலகப்பொருள்களின் உண்மையானசக்தியைத் தெரிந்து கற்களைக் கருவிப்பொருள்களாக உபயோகித்தனர்; இவ்வாறு பலநூறுவருஷங்களைக் கழித்தனர்; பின்னர், இரும்பினாற் கருவிகள்செய்து அவற்றைத் தங்கள் வேலைகளுக்குத் துணையாகக்கொண்டு சமுத்திரத்திற் கடிதிற் செல்லும் கப்பல்களைக் கண்டுபிடித்தனர்; பூமியில் விரைந்துசெல்லும் நீராவி இயந்திரங்களைத் தெரிந்து இயற்றினர்; விண்ணிற்பறக்கும் ஆகாயவிமானங்களைச் செய்து அவற்றின்வாயிலாய் இன்பம் அனுபவித்து வருகின்றனர். இவ்வாறு உலகத்து மக்கள்வாழ்க்கை பலதிறப் பட்டனவாய் இருந்தன. இவற்றையெல்லாங் கண்டறிந்தது நம் தமிழகம். அத்தகைய தொன்மையோர் நம் தமிழ்மக்கள்.

பழந்தமிழர்களை,

*"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்
ஆவயின் வரூஉங் கிழவரு முளரே."

†"ஏனோர் மருங்கினு மெண்ணுங் காலை
யானா வகைய திணைநிலைப் பெயரே."

‡"வேளாண் மாந்தர்க் குழூதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி."

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களாலும் அவற்றின் உரையாலும் பின்வருமாறு 'ஆயர், வேட்டுவர், எயினர், உழவர், மள்ளர், களமர், வலையர், நுளையர், பரதவர் என்னும் பகுப்பினராக அறியலாம்.

அவர்களுக்குள் பாணர், வள்ளுவர், பறையர், துடியர், கடம்பர், என்னும் வகுப்பார்களும், கள்ளர், மறவர், அகம்படியர் என்னும் வகுப்பார்களும் தொழில்பற்றியும் பிறகாரணம்பற்றியும் ஏற்பட்டனர்.

மேற்கூறிய அவர்கள் எல்லாரும் தாங்கள் இயற்றி வந்த தொழில் பற்றியும் ஆட்சிபற்றியும் பற்பல பட்டப்பெயர்களைத்தரித்துப் படையாட்சி, நயினார், கவுண்டர், முத்தரையர், அம்பலகாரர், சேர்வைகாரர், நாயுடு, நாயக்கர், பல்லவராயர், முதலியார், மூவரையர், உடையார், வாண்டையார், நாடார், நாட்டார், மூப்பனார் எனப் பலவகுப்புக்களாய்ப் பிரிந்தனர். அவர்கள் பெண்கோடல் உண்ணல் முதலியவற்றுள் பலர் சம்பந்தமுடையவராயும், சிலர் சம்பந்தமில்லாதவராயும் ஒருவர்கொருவர் அயலார்போல, ஒருவர் மற்றொருவரை உயர்த்தியும் தாழ்த்தியும் கூறிக்கொண்டு தமிழகத்தில் வாழ்ந்துவருகின்றனர்.

தமிழகத்தில் தற்காலமிருக்கும் தமிழ்மக்கள் ஒருவர் மற்றொருவரை நீங்கள் என்னஜாதியென்று கேட்பதையும், அவர்கள், தங்களைப் படையாட்சி, முத்தரையர், கள்ளர், உடையார், முதலியார், பிள்ளை எனக் கூறிக்கொள்வதையும் நாம் கேட்டுவருகிறோமல்லவா? அவர்கள்

---

*தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல் 23-ம் சூத்திரம்.

†	ஷை	ஷை	ஷை	24 ஷை
‡	ஷை	ஷை	ஷை	30 ஷை

இப்போது தங்கள் பட்டப்பெயர்களையெல்லாம் ஜாதிப்பெயராகக்கொண்டதுமன்றி, ஒருவர் மற்றொருவரை அயலாராகவும் எண்ணிவருகின்றனர். இது நிற்க.

தமிழ்மக்கள் சிலர் ஒருவரையொருவர் நீங்கள் என்னகுலமென்று கேட்டுக்கொண்டு, சூரியகுலம், சந்திரகுலம், இந்திரகுலம், வன்னிகுலமென்று சொல்லிக்கொள்கின்றனர். அவற்றிற்கு ஆதாரமாக இதிகாசங்களையும், புராணங்களையும் மேற்கோள்களாக எடுத்துக்காட்டுகின்றனர். இவையெல்லாம் ஆரியர் தமிழகத்தில் புகுந்தபின்னர் ஏற்பட்டன என்பதை அவர்கள் சிறிதும் உணர்வதில்லை. அவர்கள் தங்கள் முன்னையோர் இன்னார் என அறிவிக்கும் தூரதிருஷ்டிக்கண்ணாடியாகிய தொல்காப்பியப் பொருளதிகாரத்தோடும், சங்கச்செய்யுட்களோடும் இதிகாசபுராணங்களையும் தென்னிந்திய சிலாசாஸனங்களையும், பட்டயங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பனராயின் தங்களுடைய மூதாதைகள் இன்னார் என்பதை ஒருவாறு அறியக்கூடுமென்பது எனது எண்ணம்.

யான் இந்நூலில் பண்டைத்தமிழ்மக்களுள் ஒருபெருங்கூட்டத்தாராகிய முத்தரையர் எனபவரைப்பற்றி ஒருசிறிது வரைவான் தொடங்கினேன். அவர்கள் தமிழகத்தில் ஆட்சி எனபது ஒன்று ஏற்பட்டது முதல் நாளிதுவரையில் ஆண்டுவருகின்றனர். ஆங்கிலேயர் இந்தியாவைக்கைப்பற்றி நம்மை ஆளுவதற்கு இடங்கொடுத்தவர்கள் முத்தரையரே. அவர்கள் வரலாறு ஆதி முதல் நாளதுவரையிலுள்ள தமிழகத்தின் சரிதமாகும். அவர்களைப்பற்றி விரித்தும், பிறரைச் சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபற்றிச் சுருக்கியும் முன்னுரை, தமிழகம், பழந்தமிழ் மக்கள், சேர பாண்டிய சோழர்களும் முத்தரையரும், பல்லவர்களும் முத்தரையரும், முகம்மதியரும் முத்தரையரும், ஆங்கிலேயரும் முத்தரையரும் என ஒருவாறு ஏழுபாகங்களாகப் பிரித்து வரையத் தொடங்கினேன். தமிழ்நாட்டின்சரிதம் அறியவிரும்புவார்க்கு இது ஓர் கைவிளக்காகுமென்பது எனது கொள்கை.

இதனை வரைவதற்கு யான் ஆதாரமாகக்கொண்டவை தொல்காப்பியப் பொருளதிகாரம், சங்கச்செய்யுட்கள், முத்தரையர்கோவை, பிற தமிழ்நூல்கள், தென்னிந்திய சிலாசாஸனங்கள், பட்டயங்கள், அவற்றைப் பின்பற்றி எழுதிய சரித்திரங்கள், பத்திரிகைகள் முதலியனவாம்.

II. தமிழகம்.

இவ்வுலகம் சூரியனிடத்தினின்று தெறித்துவிழுந்த ஓர் பெரிய நெருப்புப்பொறி. அப்பொறி படிப்படியாய் ஆறி, நீரும் நிலனுமாய்ப் பிரிந்தது. முதன்முதல் தோன்றிய நிலப்பரப்பு தற்காலமிருக்கும் தென்னிந்தியாவுடன் சேர்ந்திருந்தது. அது இந்துமகாசமுத்திரத்தில் வெகுதூரம் வரையில் வியாபித்திருந்தது. இப்பொழுதிருக்கும் ஆஸ்திரேலியா, ஜாவா, சுமத்ரா, மடகாஸ்கர் முதலிய தீவுகளை அது தன்னுள் அடக்கிக்கொண்டிருந்தது; வடக்கில் விந்தியபர்வதமும், தெற்கில் தெனகடலும், கிழக்கில் சாவகத்தீவும், மேற்கில் மடகாஸ்கர் தீவும் எல்லைகளாக விளங்கின. அதைக் குமரிகண்டமென்றும் இலமூரியா என்றும் பிற்காலத்தார் வழங்கினர். அதுதான் உலகத்தில் முதன்முதல் தோன்றியநிலம். அந்நிலத்தில் பெரும்பாகம் கடலால் அழிவுற்றது.

குமரிகண்டம்.

குமரிகண்டமிருந்தவிடம் இப்பொழுது நீரும் நிலமுமாய் இருக்கின்றது. அக்கண்டத்தின் நிலப்பாகத்தில் தென்னிந்தியாவும், ஆஸ்த்ரேலியாவும், இலங்கை, சுமத்ரா, ஜாவா, மடகாஸ்கர் என்னும் தீவுகளும் தவிர மற்றஇடம் இப்பொழுது நீரால் வியாபிக்கப்பட்டிருக்கிறதல்லவா? நீராயிருக்குமிடத்தில் இருந்த நிலம் கடலால் மூன்றுமுறை அழிவுற்றது. *'இலங்கைத்தீவின் சரித்திரக் குறிப்புக்களிலிருந்து மூன்று கடல்கோள்கள் அறியப்படுகின்றன. அவற்றுள் முதலாவது கி. மு. 2387-ல் அதாவது பைபிளில் குறித்த நோவாப் பிரளயத்தையொட்டி நிகழ்ந்ததெனவும், இரண்டாவது கி. மு. 450-ல் நிகழ்ந்ததெனவும், மூன்றாவது கி. மு. 213 முதல் 203 வரை யாண்ட தேவனம்பிரியதிஸ்ஸன் என்ற அரசன்காலத்தில் நிகழ்ந்ததெனவும் சொல்லப்படும்.' மேற்கூறிய மூன்று பிரளயங்களாலும் அழிந்த நாடு தமிழகத்தின்சம்பந்தமுடையதென அறியவேண்டும்.

குமரிகண்டமும் கடல் கோள்களும்.

---

*தமிழர்நேசன், தொகுதி VII, பகுதி 1, புறநானூற்று ஆராய்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.

தமிழகம் என்பது தமிழ்நாடு. அது ஆதியில் குமரிகண்டத்தோடு சேர்ந்திருந்தது. இப்பொழுதிருக்கும் தமிழ்நூல்களைக்கொண்டு அது வடக்கே திருவேங்கடமலையையும், தெற்கே குமரிமலையையும், கிழக்கும் மேற்கும் கடலையும் எல்லைகளாகஉடையது என நாம் அறியலாம். "வடவேங்கடந்தென்குமரி, ஆயிடைத் தமிழ்கூறுநல்லுலகம்" என்பது தொல்காப்பியப் பாயிரம். தெற்கெல்லையைக் குமரியாறுஎன *உரையாசிரியர்கள் கூறுவர். அஃது ஆறுஅன்று; மலை என்று சிலப்பதிகாரத்தில் வரும்† "பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடு" என்னும் தொடரால் அறியலாம (குமரிக் கோடு=குமரிமலை; கோடு - மலை).

தமிழகம்.

தமிழ்நாட்டிற்குக் குமரிமலை தெற்கெல்லையாக இருந்தகாலத்தில் இலங்கை இந்தியாவுடன் சேர்ந்திருந்தது. அவ்விரண்டிற்கும் இடையில் அநேக நாடுகள் இருந்தன. அவையாவன: 'ஏழ் தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ் பின்பாலைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகாரைநாடு, ஏழ்குறும்பனைநாடு, குமரி கொல்ல முதலிய பன்மலை நாடு, என்பனவாம். அவையெல்லாம் கடலால் அழிவுற்றன. அவற்றின் அழிவைக் ‡கலித்தொகை, §புறநானூறு, ||சிலப்பதிகாரம், ¶சிலப்பதி காரவுரை முதலியவற்றால்அறியலாம்.

தமிழகமும் கடல்கோள்களும்

புவி காடும் மலையும் பள்ளத்தாக்கும் கடற்கரையுமான தன்மையை உடையதாகவே படைப்புக்காலத்தில் அமைந்திருந்தது. சூரிய உஷ்ணத்தாலும், பலவேறு காரணங்களாலும், மக்களாலும், அவற்றுள், காடும் மலையும் திரிந்து மணற்பாங்காக மாறுதலும், பள்ளத்தாக்கும் கடற்கரையும் அவ்வாறு வேறுபடுதலும், ஒன்று மற்றொன்றாகத் திரிதலும் உண்டல்லவா? ஆகவே புவியின் மேற்பரப்பு, காடும் மலையும் பள்ளத்தாக்கும் கடற்கரையும்,மணற்பாங்குமான ஐவகைப் பாகுபாட்டினையுடையதாயிற்று. அவ்வைவகைப்பாகு

தமிழகமும் ஐவகை நிலங்களும்.

---

*இளம்பூரணவடிகள், நச்சினார்க்கினியர். †சிலப்பதிகாரம். மதுரைக்காண்டம் காடுகாண்காதை 19—20 அடிகள். ‡கலித்தொகை முல்லைக்கலி 104. §புறநானூறு 6, 9 செய்யுட்கள். ||சிலப்பதிகாரம். மதுரைக்காண்டம் 18, 20 அடிகள். ¶சிலப்பதிகாரம் இரண்டாம்பதிப்பு. 230 பக்கம்.

பாட்டினை நம் தமிழகமும் உடையது. அவற்றிற்குப் பெயரிட்டகாலத்தில் நம் தமிழ்மக்கள் அவ்வவ்விடங்களில் இருந்த மரம் பூ என்பனவற்றையே அவ்வவ்விடங்களுக்குப் பெயர்களாக வழங்கினர். காடும் காடுசார்ந்த இடமும் முல்லைநிலமென்று பெயர்வழங்கப்பட்டன. மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சிநிலமென்று கூறினர். பள்ளத்தாக்காகிய சமவெளிப் பிரதேசத்தை மருதநிலமென்று வழங்கினர். கடற்கரைப்பிரதேசத்தை நெய்தனிலமென்றனர். மணற்பாங்கைப் பாலைநிலமென்று வழங்கினர். இவ்வாறு முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனத் தமிழகத்தை நம் பண்டைத்தமிழாசிரியர் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் பகுத்துளர். அவற்றைப் பின்பற்றியே பிற்கால பூகோளநூலாசிரியர் பூமியின் மேற்பரப்பை மலைப்பிரதேசம், பீடபூமிப்பிரதேசம், சமவெளிப்பிரதேசம், கடற்கரைப்பிரதேசம், பாலைவனப்பிரதேசம் எனப் பாகுபடுத்திக் கூறுவாராயினர்.

ஐவகை நிலங்களும் தமிழ்நூல்களும்

தமிழகத்தில் அவ்வவ்விடங்களில் வாழ்ந்துவந்த மக்களின் தொழில் மணம் (விவாகம்) முதலியவற்றை அமைத்து அந்தந்த நிலப் பெயர்களாலே தனித்தனியாகப் புலவர்கள் செய்யுட்கள் இயற்றியருளினர். முல்லைப்பாட்டு குறிஞ்சிப் பாட்டு என்பனவற்றால் அவற்றை அறியலாம். அவை முறையே முல்லைநிலமக்களையும் குறிஞ்சி நிலமக்களையும் கூறுவனவாகும். கலித்தொகை என்னும் தொகைச்செய்யுள் ஐவகைநிலமக்களின் வாழ்க்கையையும் தனித்தனிகூறுநூலாக முல்லைக் கலி, குறிஞ்சிக்கலி, பாலைக்கலி, மருதக்கலி நெய்தற்கலி என்னும் பகுதிகளையுடையதாக இயற்றப்பட்டுளது. அத்தொகைச்செய்யுளாலும், மற்றச் சங்கச்செய்யுளாலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தாலும் பண்டைத் தமிழ்மக்களது தொழில், இல்வாழ்க்கை, ஆட்சி முதலியவற்றை அறியலாம்.

III. பழந்தமிழ்மக்கள்.

தமிழகம் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐவகைப் பாகுபாட்டினையுடையது என ஒருவாறு அறிந்தோம். இனி அந்நிலங்களில் வாழ்ந்துவந்தமக்களின் பெயர் தொழில் முதலியன வற்றை ஒரு சிறிது தெரிந்துகொள்வாம்.

ஐவகை நிலமக்களின் பெயர்கள்.

முல்லைநிலமக்களுள் ஆடவர்க்கு இடையர், ஆயர் என்றும், மகளிர்க்கு இடைச்சியர் ஆய்ச்சியர் என்றும் பெயர். குறிஞ்சிநிலமக்களுள் குறவர் கானவர் என ஆடவர்க்கும், குறத்தியர் என மகளிர்க்கும் பெயர் வழங்கினர். பாலைநிலமக்களுள் ஆடவர்க்கு எயினர் மறவர் என்றும் மகளிர்க்கு எயிற்றியர் மறத்தியர் எனவும் பெயர்கூறினர். மருதநிலமக்களில் ஆடவர்க்கு உழவர், கடையர், மள்ளர், களமர் எனவும், மகளிர்க்கு உழத்தியர், கடைசியர் எனவும் நாமம்வழங்கினர். நெய்தனில மக்களுள் ஆடவர்க்கு பரதவர், நுளையர், வலையர், அளமர் என்றும், மகளிர்க்குப் பரத்தியர், நுளைச்சியர், வலைச்சியர், அளத்தியர் என்றும் பெயர் வழங்கினர்.

ஐவகை நிலமக்களின் தொழில்.

முல்லைநிலமக்கள் வரகு, சாமை, முதிரை முதலியவற்றை விதைத்து அவற்றின் களைகளைந்து அவைமுற்றியதும் அவற்றை அரிந்தும், கடாவிட்டும் ஆனினம் (பசு)மேய்த்தும் காலங் கழித்தனர். குறிஞ்சிநிலத்தார் மலைநெல்விதைத்தும், தினைகாத்தும், தேனழித்தெடுத்தும் கிழங்கு கிண்டியும், அருவிநீர் ஆடியும், சுனைநீர்மூழ்கியும், கவி ஞற்று விளங்கினர். பாலைநிலத்தார் பகற்கொள்ளை யடித்தும், பசுக்களைக் கவர்ந்தும், போர்புரிந்தும் காலங்கழித்தனர். மருதநிலமக்கள் நெல்விதைத்து, களைபறித்து நெல்லறுத்து, வைக்கோல்துவைத்து வாழ்ந்தனர். நெய்த னிலமக்கள் மீன்பிடித்தும், மீன் உலர்த்தியும், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டியும், உப்புண்டாக்கியும், கடலாடியும் களிப்புற்று வாழ்ந்தனர்.

பண்டைத்தமிழ்மக்கள் ஒருவருக்கொருவர் மனமொத்து விவாகஞ் செய்துகொண்டனர். *“இல்வாழ்க்கை யடைவதற்குமுன் ஒருவன் ஒருத்தியை மறைவிற்கண்டு தன்பாலுள்ள அன்பை அவட்கு வெளியிட்டுக் கூடி ஒழுகுதலும், அக்கூட்டம் வெளிப்பட்டபின் பெண்ணின்பெற்றோர் அதற்கிணங்குதலும், இணங்காராயின் அவரறியாமல் அப்பெண்ணைக் கரந்தழைத்துச்சென்று தனக்குரிய மனையாளாகக்கொண்டு வாழ்தலும் போன்ற முறை இந்நாட்டில் வழங்கிவந்தமை அறியப்படுகிறது. எனவே தமிழ்மக்களது பண்டையொழுக்கமானது ஒருவருக்கொருவர் மனமொத்துக்கூடும், வேதத்துக்கண்ட காந்தர்வமணம்போன்றதென்று சொல்லலாம். ஆனால், களவுக்கூட்டத்தின்பின்னர், ஒருவன் ஒருத்தியை அவள் சுற்றமறியாவகை உடன்கொண்டுபோதலும் பழையவழக்கில் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது. எனினும், தலைவியின் சம்மதம் பெற்றே அவ்வுடன்போக்கு நிகழ்ந்துவந்தது.” அதைப் பிறர் அறிந்தாலும், அல்லது பெற்றோர் தலைவியைத் தலைவனுக்குக் கொடுக்கப்பெற்றாலும் அது கற்பெனப்படும். அக்காலத்து மணம்நிகழ்தற்கு மந்திரத்தோடு சடங்குக ளில்லை.

ஐவகை நிலமக்களின் விவாகம்.

ஒவ்வொருநிலத்துமக்களும் தங்கள் தங்களுடைய தொழில்முதலியன முட்டுப்பாடின்றி நடைபெறுவதற்குத் தங்களுக்குத் தலைவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொண்டனர். அப்படி அவர்களால் ஏற்படுத்திக்கொண்ட அரசர்கள் பெருநிலமன்னவராயும் குறுநிலக்கிழவராயு மிருந்தனர். அவர்கள் அவ்வரசர்களை உயர்ந்தவர்களாய் மதித்தும், தங்களைத் தாழ்ந்தவராய்ப் பாவித்தும் வந்தனர். ஆதலால் ஒவ்வொருநிலத்தாருள்ளும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என இரு பகுப்பினர் ஏற்பட்டனர். தாழ்ந்தவர் குடிமக்கள். உயர்ந்தவர் அரசர்கள். முல்லைநிலத்துக்குரிய அரசனுக்குக் குறும்பொறைநாடன் என்று பெயர். அது தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியலில் †“ஆயர்வேட்டுவர்”

ஐவகை நிலமக்களின் அரசர்கள்.

---

*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி 8-ம்பக்கம் (மு. இராகவையங்காரவர்கள் எழுதியது). †28-ம் சூத்திரம்.

என்னும் சூத்திரவுரையில் ஆசிரியர் இளம்பூரணவடிகள் 'குறும்பொறை நாடன் என்றுற்போல்வன ஆட்சிபற்றிவரும்' எனக் கூறியதால் அறிக. மற்றநிலத்தலைவர்களுக்கும் பொருந்துவனவற்றை அறிஞர் ஏற்றபெற்றி அமைத்துக்கொள்வர். குறிஞ்சிநிலவரசனுக்குப் பொருப்பன் வெற்பன் சிலம்பன் என்றுபெயர். மருதநிலத்தலைவனுக்கு ஊரன் மகிழ்நன் என்று பெயர். சேர்ப்பன் புலம்பன் என்பன நெய்தனிலவரசனுடைய பெயர்கள். பரதவர் நெய்தனிலத்தில் குறுநிலவரசராயிருந்தனர். பாலைநிலத்தலைவனுக்கு விடலை காளை எனப் பெயர்வழங்கினர். ஒவ்வொருநிலமும் பெருநிலமன்னராலும் குறுநிலக்கிழவர்களாலும் ஆளப்பட்டன. பரதவர் வேளிர் முதலியோர் குறுநிலமன்னராயிருந்தனர். சங்கச்செய்யுட்களில் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியில் 144-ம் அடியில்வரும் "தென்பரதவர்" என்னும் தொடர்மொழிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர், தென்பரதவர் - தென்றிசைக்கட் குறுநிலமன்னர் எனப் பொருள்கூறியிருத்தலால் அறிக. அவர்கள் கொற்கைக்கூச் சமீபத்தில் முத்தெடுக்குமிடத்தில் குறுநிலவரசராயிருந்தனர். அவர் குறுநிலவரசர் என்பதை "தென்பரதவர் மிடல்சாய-வடவடுகர் வாளோட்டிய" என்னும் புறப்பாட்டாலும் அறியலாம். அவர்களே தமிழகம் சீர்கெட்டிருந்தகாலமாகிய கி. பி. ஐந்தாவது நூற்றாண்டுக்குப்பிறகு முத்தரையர் என்னும் பட்டத்தைப் புனைந்தவர்; தற்காலத்திலும் அப்பட்டத்துடன் வாழ்ந்துவருகின்றனர். அவர்கள் முத்தெடுக்குமிடத்தில் இருந்தமையாலும், முத்துக்களைத் தங்கள் மன்னவனுக்குக் கப்பங்கட்டிவந்தமையாலும் முத்தரையர் என்று பெயர்பெறவில்லை. மும்மண்டலங்களிலும் சிற்சிலவிடங்களைக்கைப்பற்றித் தங்கள் ஆட்சியை அவ்விடங்களில் நிலைநாட்டி 'முத்தரையர்' என்னும் பட்டத்தைப் புனைந்தனர். அது பின்னர் விளக்கப்படும்.

ஐவகை நிலமக்களின் அரசர்களும் சேர பாண்டிய சோழர்களும்.

ஐவகைநிலவரசர்களுள், சேரர் பாண்டியர் சோழர் என்ற பெயருடன் மூவர் பெருநிலக்கிழவராயினர். பலர் சிறுநிலமன்னவராயிருந்தனர். சேர பாண்டிய சோழர்களை வடக்கேயிருந்து வந்தவர்கள் என ஆங்கிலங்கற்ற சில சரித்திரவாசிரியர்கள் கூறுவர். அவர்கள்கூறும் கூற்றுச் சிறிதும் ஆதாரமற்றதாகும். அம்மூவேந்தர்க்கும் நிகண்டில் வழங்கும் பெயர்களே அவர்கள் பழந்தமிழ்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தங்களுக்கு அரசர்களாய்

அமைத்துக்கொள்ளப்பட்ட உயர்ந்தோர் என்பதற்குச் சான்ருகும். *சேரனுக்குச் சிலம்பன் என்னும் பெயர் நிகண்டிற்கூறப்பட்டுளது. அது சேரன் ஆதியில் குறிஞ்சிநிலத்தலைவனுக இருந்தவன் என்பதைப் புலப்படுத்தும்.† பாண்டியனுக்குக் குமரிச்சேர்ப்பன்என நாமம் வழங்குகிறது. அது பாண்டியன் நெய்தனிலத்தலைவன் என்பதைக் குறிக்கும். ‡ சோழனுக்குப் பொன்னித்துறைவன், நேரிவெற்பன் என நெய்தனிலத்தலைவன்பெயரும் குறிஞ்சிநிலவரசன்பெயரும் கூறப்பட்டுள்ளன. இதனுல் சோழன் நெய்தல் குறிஞ்சிநிலங்களுக்கு மன்னவனுயிருந்தான் என்பதை ஒருவா றுணரலாம். இதுவரையிற் கூறியவாற்ருல், சேர பாண்டிய சோழர்கள் பழந்தமிழ்மக்களே என்பது உள்ளங்கைநெல்லிக் கனியாகும். பரிமேலழகர் $'படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவரும் பழங்குடியினர் சேர சோழ பாண்டியர்' எனக்கூறியதும் மேற்கூறியதை ஒருவாறு ஆதரிப்பதாகும்.

(தொடரும்)

ப. மு. சிதம்பரமுத்தரையன்,
தமிழ்ப்பண்டிதன்,
போர்டு ஹைஸ்கூல், அரியலூர்.

---

* "பூழியன் உதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வானவரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன்
கொல்லிச் **சிலம்பன்** கோதை சேரளன்
போந்தின் கண்ணிகோன் பொருநைத் **துறைவன்**
சேரமான் மலயமான் கோச்சேரன் பெயரே."

† "செழியன் தமிழ்நாடன் கூடற்கோ தென்னவன்
வழுதி மீனவன் பஞ்சவன் மாறன்
கௌரியன் வேம்பின் கண்ணிக்கோன் கைதவன்
பொதியப் பொருப்பன் புனல்வையைத் துறைவன்
குமரிச் **சேர்ப்பன்** கோப்பாண் டியனே."

‡ "சென்னி வளவன் கிள்ளி செம்பியன்
பொன்னித் **துறைவன்** புலிக்கொடிப் புரவலன்
நேரி **வெற்பன்** கோழிவேந்தன்
சூரியன் புனநாடன் கோச்சோழன் பெயரே."
(சேந்தன் திவாகரம் மக்கட்பெயர்த்தொகுதி).

$ திருக்குறள். குடிமை. 5 உரை.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

[௨௭௯-ம் பக்கத்தொடர்ச்சி].

போர்புரிபடலம்.

மறையவர்முனிவரர்மன்னர்மந்திரத்
துறையறியமைச்சர்கள்யாருந்தொக்கவாய்
விறல்கெழுமன்னவன்வித்துமாலிபா
லறைகுதியிதுவெனத்தூதொன்றாங்குய்த்தான். (1)

உய்த்தவத்தூதுவனெல்லையேகியே
வித்துமாலிப்பெயரரக்கர்வேந்தனைக்
கைத்தலங்குவித்திடாதெதிரக்கண்டலும்
பைத்தலையரவெனச்சீறிப்பார்த்தரோ. (2)

கடுந்திறற்கலுழனைக்கண்டகட்செவி
யொடுங்கலில்படங்குவித்தொடுங்குமாறுபோ
னெடுங்கரங்குவித்திடாதென்னைநேர்பொரு
மடங்கல்போல்வந்தனைமனனம்யாதென. (3)

கேட்டிநீயுலகொருமூன்றுங்கேடற
வோட்டியதிகிரியானொற்றையாணையான்
வாட்டிறற்புரூரவாவென்னுமன்னவ
னாட்டின்வந்திறுத்தனனெவருநண்ணினார். (4)

நீயுமங்கவனடித்தலத்தினீண்முடி
தோயவந்திறைஞ்சிலையென்னசொல்லென
வாயவன்விளம்பலுமழன்றுநெய்சொரி
தீயெனக்கொதித்தனன்றீயின்வெம்மையோன். (5)

வெருக்கொளாதிவ்வுரைவிளம்பினானுயிர்
முருக்குகவிடலெனமொழியமந்திரர்
தருக்குடைமன்னவாதூதர்தம்முயிர்க்
கெருக்கிடையெய்தினுமெண்ணற்பாலரோ. (6)

உன்னடித்தாமரையுகளஞ்சென்னிமே
னென்னலிற்சூடினேனின்றுநேர்ந்திடி
லன்னதையேதெனக்கேட்பதன்றியே
கொன்னதேசினத்தலென்றறியக்கூறினார். (7)

ஆகினன்றெனச்சினமடங்கித்தூதனை
யேகியதென்னைகொலியம்புவாயென
வானைவேலரக்கர்கோன்வழங்கவையமூர்
பாகனுமிவ்வுரைபகர்ந்திட்டானரோ. (8)

பாய்திரையுலகெலாம்பரிக்குந்திண்டிற
லுயகனிற்கிதுநவிற்றுகென்றனன்
வாயினீங்கியவெளிமனையினூடொரு
நாயுமேவுறுமெனநவிற்றுநல்லுரை. (9)

யானையுமிரதமுமிவுளியும்பெருஞ்
சேனையும்யானுமென்றேவிதன்னொடு
வேனில்வந்திறுத்துழிச்சோலைமேவலுந்
தானிதிற்புகுந்தது தருக்கின்றன்மையே. (10)

நம்பெருநகரைவிட்டொழிதிநவ்வெனில்
வெம்பெரும்படையொடுமமர்க்குமேவுதி
தம்பமற்றிலையுனக்கெனவுஞ்சக்கரத்
தெம்பிரானுரைத்ததென்றியம்பிமீண்டனன். (11)

தேர்ப்பெரும்பாகனுஞ்செப்பிமீண்டபின்
கார்ப்பெருங்கருநிறத்தரக்கர்காவலன்
றூர்ப்பெருஞ்சேனைகளமர்க்குச்சார்கெனப்
போர்ப்பறையறைவித்தான்பூட்கைமேலரோ. (12)

பறையொலிகேட்டலும்பரந்தமரப்படை
துறைதொறுந்துறைதொறுஞ்சூழ்ந்துதொக்கன
வுறைபடுவான்முதலழியுமூழிநா
ளறைகடலொன்றுமொன்றுவதென்னவே. (13)

வேறு.

கடைபற்றியகட்கனலோடுகவுட்
கிடைபெற்றபதன்புனலுமிகலப்
படைபெற்றுயர்பாகொடுநாகமெலா
நடைபெற்றனவொத்தனநாகமெலாம். (14)

பெய்யும்புயல்பேரகடூடுருவி
யெய்துங்கொடியோடுகொடிஞ்சிலிவர்ந்
தையங்கெடவாதவனூர்தியென
வையங்கணிறைந்தனவையமெலாம். (15)

தேசுற்றகுரத்துகள்சேணுலகும்
வீசிக்கதிர்மெய்புதையப்புதையுற்
றுசைக்காடக்கரியஞ்செவியின்
வாசிக்கவெழுந்ததுவாசிகளே. (16)

இடியாடுகொடித்தனியிந்திரனுங்
கடியாடவசைத்ததுகாருவரிப்
படியாடவிரிந்துபரந்தவிறற்
கொடியாடவெழுந்ததுகோப்படையே. (17)

காரைப்பிழிகையினர்காய்கனலின்
சூரைச்சுடுகண்ணினர்சூழுருமும்
பேரக்கவர்வாயினர்பேரகலப்
பாரைக்கவிழ்செய்படைவீரர்களே. (18)

பிச்சங்கண்மணிக்கொடிபெய்ந்நிழலால்
அச்சந்தருமன்னவராலமெழ
மெய்ச்சந்திரனும்மதின்மேவினபோ
லுச்சந்தருவெண்குடையும்பரெழ. (19)

திண்மேவியயானைமதத்தொடுசெம்
பண்மேவியவாசிகள்வாய்படுநீர்
மண்மேவியவாரியும்வானதியும்
வெண்மேனிகறுப்புவிதித்தனவால். (20)

கோடும்முரசும்பணையுங்குரம்வைத்
தாடும்பரியுங்கரியும்மமரிற்
றேடும்புகழ்வீரர்தெழிப்புமெலா
மூடுங்கடலென்னமுழங்கினவால். (21)

வில்வித்தகர்வாளினர்வேலினர்மெய்
வெல்வித்தகர்சூழ்வரவாளரிவெம்
புல்விற்பொலிகுன்றிடைபோதுதல்போ
லெல்விற்பொலிதேர்மிசையேறினனே. (22)

வேறு.

எழுந்தனன்வித்துமாலியமர்க்கெனவிசைத்தலோடுங்
கொழுந்துறுகீர்த்தியெல்லாவுலகமும்படர்த்துகோமான்
கழுந்துறுவரிவிற்றாங்கிப்புட்டிலும்புறத்துக்கட்டிச்
செழுந்தொடைத்தும்பைசூடிச்சென்றனன்விமானத்தேர்மேல் (23)

புந்திதன்புதல்வன்சேனைப்புணரியுமரக்கர்கோபச்
செந்தழல்வடவைச்சேனைக்கடலுநேர்சென்றுதாக்க
வந்தரத்துலகநீடிக்கயங்களுமவனிதாங்க
னந்தனீண்முடியுமெல்லாநடுநடுங்கிற்றன்றே. (24)

நாணொலிகலினப்பாய்மாநகையொலியிகல்வேல்வீரர்
பூணொலிவயிரத்தோளினபுடைப்பொலிகுடர்களார
ஊணொலிகணங்களாடலுழப்பொலிநிழற்பாய்வேழச்
சேணொலிபணைத்துமொன்றாய்த்திசாமுகங்கிழித்ததன்றே. (25)

கொற்றவெஞ்சிலையுமம்புங்குந்தமுங்குணிலுங்கோலு
மெற்றுறுதடியுங்கல்லுமீட்டியுந்தோட்டிவாளுஞ்
சுற்றுறுகயிறும்வேலுஞ்சூலமுமமலந்தாலுங்
கற்றனபடைகளோச்சியெதிர்ந்தனர்கனலின்வெய்யோர். (26)

இடித்தலையிடிவீழ்ந்தென்னவெரிசுடுதறுகட்டீயோர்
முடித்தலைமுடியத்தண்டால்முழக்கினமுழக்கிஞெல்வாய்
மடித்தலைபுழைக்கைக்குன்றமத்தகங்கிழியவீசிப்
படித்தலைவீழ்த்துநின்றார்மடங்கலின்றிறத்துப்பாலோர். (27)

ஒருகணையொருதேர்வீழ்த் துமுடைந்தமாத்தேர்கண்மோதிக்
கரிபரிசாய்க்குஞ்சாய்ந்தகரிகள்போய்க்கலினப்பண்ணின்
பரிபலவுருட்டிமேந்தப்பரிகள்வெம்பருவாய்ச்சீற்றத்
தரிபொருதிறத்துவீராக்கைகள்கிழிக்குமன்றே. (28)

ஈழ்த்தனவிடித்தசுற்றியெறிந்தனமறிந்துவீழ
வீழ்த்தினமுறிந்தசில்லிநுகப்பரிவெவ்வேறாக்கி
யூழ்த்தினதுகைத்தநூறுயுமுகங்களைமுழக்கினால்வாய்த்
தாழ்த்தகைக்குன்றந்தன்றுந்தடமணித்தனித்தேர்க்குன்றை (29)

சில்லிசில்லிகளிற்றுக்கச்சிதைந்தனதேர்கள்மற்றக்
கொல்கினக்கரியொன்றொன்றைப்பேர்பெறக்குறைத்துவீழ்ந்த
கல்லணைப்பரிகண்மற்றும்பரிகளைக்கூரத்தாற்காய்ந்த
தொல்லைமாப்படைகளிற்றபடைகளாத்தொலைந்ததன்றே. (30)

வடிம்புறுகணைகளங்கங்கெதிரெதிரறுத்துமாற்றி
நெடுந்திசைமறைத்துவானநிலத்திடைஞ்செல்லுநீர்மை
படிந்துளிவிசும்புதந்ததமக்கெனப்பாருநங்கைம்மா
றிடுந்திறன்மாரிவிண்ணுக்கேற்றுதல்போன்றதன்றே. (31)

கூனவாய்க்கணைகள்பாயக்குறைந்ததாட்கவிரந்தூய
பேனநீரகத்தாழ்த்தோங்கன்மருங்கெலாம்பிறந்துசூழக்
கானிமிர்நெடுந்தேர்செம்பொற்றசும்பொடுககனஞ்செல்வ
மானமூர்ந்துடுவொரடேகுமதியெனவயங்குமாதோ. (32)

ஓதைநீண்மணித்திண்டேரினுறுப்பெலாம்வெவ்வேறாக்கி
மீதுறுபுங்கமுந்தச்சில்லிவான்செல்லும்வீக்கம்
சீதநீர்க்கமலம்பூத்ததிருமறுமார்பப்புத்தே
ளாதவமறைப்பவிட்டவாழியைநிகர்த்ததன்றே. (33)

தடித்தெனும்பகழிக்கூர்வாய்தடிந்திடும்வீரர்சென்னி
மடித்தவாயுறக்கிமேலைவானிடைக்கடிதுசெல்வ
வெடுத்தவிவ்வுடல்செற்றானைக்கொல்வதற்கேற்றவாக்கை
பிடித்தபினன்றிமீளேனெனச்செலும்பெற்றிபோலும். (34)

வேறு.

மேருவாமெனவிளங்குமிரதந்துரகதங்
காருவாமுதலசேனைகளொடுங்கரைபொரு
நீருவாவினின்விளக்குறமுழக்கினெடுவேற்
பூருவாவினைவளைத்தனர்விளைத்தனர்கள்போர். (35)

மழுவெழுக்குலிசம்வாளிகதையாழிகுணில்வேல்
கழுமுண்முச்சிகையயிற்களலைவாரிகடைநாள்
நிழல்செய்பொற்கிரியின்மீதுநெடுநீர்பருகிவான்
எழுமுகிற்கள்சொரிதாரையினெறிந்தனனரோ. (36)

அக்கணத்தினிலமன்றமதிமைந்தன்மகனுங்
கைக்கணத்தசிலைநாணுநுமெழக்கலிகொள
முக்கணத்தனெதிர்மூதெயில்பொடித்திடவிடுஞ்
செக்கணைக்குநிகருங்கணைகள்சிந்துதலுமே. (37)

அற்றவாளிவிலையற்றகடகம்பரிசையும்
அற்றசூலமழுவற்றனபொருங்குலிசமும்
அற்றதோமரமொடற்றனவவற்றுடிகளும்
அற்றபாலமுதலற்றனதுறுந்துகள்களாய். (38)

தலைவிழுந்தனதடச்செவிவிழுந்தசரண
நிலைவிழுந்தனநெடுங்கரம்விழுந்தகுடரின்
குலைவிழுந்தநிமிர்கோட்டிவிழுந்தவுடல
மலைவிழுந்தெனவிழுந்தனமதக்களிறெலாம். (39)

கொடிதுணிந்தனகொடிஞ்சிடைதகர்ந்தசகடத்
தடிகழன்றகடையாணிகள்கழன்றசுவரும்
பொடிபடிந்தனபொடிந்தனமணித்திரள்பொறிக்
திடிதடிந்தசிகரத்தினிடிந்ததிரதம். (40)

சிலைவலங்கொடுமிசைப்பொலியரக்கர்சிதறக்
குலவுமெய்க்கதிகுறைந்துயிருநின்றுகுலவ
மலர்தலைப்பெரியவானிடையிதித்துவரிசூ
ழுலகினைக்கெடிவிழுந்ததுநிகர்த்தவுளமா? (41)

கோ..................தொடிக்கைபருவாய்
தாணிரைக்கழல்தழற்படைமுதற்பொடிபடக்
கோணமுற்றெதிர்மலைந்தவர்குலத்தொருவரைக்
.... (42)

வேறு.

அன்னகாலையிலதரமேலெயிறுறவதுக்கி
மின்னும்வாளுளைக்கலினமான்றேர்விரைந்தோட்டிக்
கொன்னவார்சிலைகுழைத்துநாண்சிறொலிகொண்டான்
சென்னிவானவர்பிதிரெறிந்திடும்படிதீயோன். (43)

முதிரும்வெஞ்சிலைமுழக்கொடுமுரிமான்றடந்தே
ரெதிர்நடந்திடல்காண்டலுஞ்சிறுநகையெய்த
மதிமகன்றிருமைந்தனுநாணொலிவழங்கப்
பதுமனண்டமோவிண்டதென்றமரரும்பதைத்தார். (44)

அடுத்தவன்சிலைமுழக்குமவன்சிலையார்ப்பு
முடுத்தநீர்க்கடலுலகெலாம்விழுங்கிமேலுலவ
விடித்தவானுருமேறெனுங்கடுங்கணைபிறைமேல்
விடுத்துவெள்வளைமுழக்கிநின்றார்த்தனன்வெய்யோன். (45)

வெய்யவன்கணைவிடுத்தனன்முனமெனவெகுண்டே
வையமேழையுமாளுடைமதிதிருமருமான்
சையமாதியவரைகளுந்திரைகளுஞ்சலிப்பத்
துய்யவால்வளைமுழக்கிநின்றொருகணைதுரந்தான். (46)

துரந்தவெங்கணையொன்றையுமிரண்டெனத்துணித்தே
நிரந்தவிண்ணையுமண்ணையுங்கணைகளானிரைத்திட்
டுரந்தரும்புயத்தொளிதிகழ்வயிரவொண்கவசத்
தரந்தருங்கதிர்க்கணைதொடுத்தார்த்தனனரக்கன். (47)

துற்றவாளிகளனைத்தையுந்துகள்படத்துணித்தே
புற்றராவெயிற்றினுங்கொடுங்கணையொன்றுபூட்டிச்
செற்றமீக்கொளக்கொடியவன்புயத்திடைசெறித்து
கற்றைமாமணிக்கவசத்தைமுட்டறக்கழித்தான். (48)

அங்கதம்புபத்தகன்றிடவீழ்தலுமழன்று
வெங்கதங்கொளப்பிறைமுகக்கணையொன்றுவிடுத்தே
திங்களின்குலத்தரசர்கோன்மானமேற்செறித்த
மங்குறோய்நெடுங்கொடியினைவீழ்த்தினன்மறவோன். (49)

கொடிவிழுத்தினனிவனெனவவனவன்கொடியும்
படிவிழுத்தினன்பதாகையைவிழுத்தினன்பதாகை
முடிவிழுத்தினன்முரிவெஞ்சிலையினைமுறிவித்
திடிவிழுத்தினன்விழுந்தவத்திந்துகுலேசன். (50)

மாறுவெஞ்சிலைவாங்கினன்வாங்கியதனைத்துங்
கூறுகூறுகளாய்ப்படிவிழும்படிகுறைப்ப
வீறுகாண்பணிங்கிவனுயிரிமைப்பிடையெனவோர்
பாறுசேரயிற்படைவிசைத்தெறிந்தனன்பதகன். (51)

கடல்சுவற்றினீள்கனவரைதகர்த்த வெங்கடுஞ்சூ
ருடல்துளைத்தவேலுரத்தினுழாத்ததவ்வுரவோன்
படர்புயத்திடைபட்டனபட்டனவெனுமுன்
னிடையறுத்தனனொருகணைகொடுதுணியிரண்டாய். (52)

உரத்தவேற்படையிறுதலுமற்றவனுரத்துச்
சிரத்தைவீழ்த்துவனிதுகொளென்றெறிந்தனன்செய்யும்
வரத்தின்வாங்கியதமரைத்துரந்ததுமறலி
கரத்தினீடியதண்டினும்வலியதோர்கதையே. (53)

வரைக்குலந்தகர்த்திடுமிடியேறெனவாலுந்
தரைக்குநாயகன்றழலுமிழ்வயிரவாய்ச்சரத்தா
லுரைக்குமாத்திரத்திடையிடைதுகள்களாயுக்குக்
குரைக்கும்வாரிதிக்கப்புறத்துகும்படிகுறைத்தான். (54)

வயிரவான்றடிபொடிப்பொடியாகியவகையுஞ்
செயிரிலாதவெஞ்சிலைத்திறத்தியற்கையுந்தெரிந்தே
யயிரும்வெண்பொடியாக்குவன்சிலையினையாக்கி
யுயிருமுண்பனென்றொருபெருவரைவிரைந்துய்த்தான். (55)

மேகராசிகள்கண்படைகொண்டிடவிரிந்து
மாகமீயுயர்குன்றறக்குன்றறமலைய
வேகவாளிகொண்டெதிருறவெய்தனனிமயத்
தோகைபாகனூர்மிலேச்சியமதிக்குலத்தோன்றல். (56)

நீளும்வன்கிரியெதிருறச்சேறலுநிமிர்ந்த
தோளினேற்றனனுந்தலுஞ்சிந்தினதுகளாய்
மீளியன்னவனன்னதுகண்டுளம்வியந்தா
ளிமொய்ம்பினன்புயவலிப்பெருமையையறிந்தே. (57)

சென்றகுன்றினைத்திரித்தனனொருகணைத்திறத்தா
லென்றுமமற்றொருமழுவெடுத்தார்த்துருத்தெறிந்தான்
றன்றுமம்பினுற்றுணித்திடத்துணிகிலாதெதிர்ந்த
தன்றனிச்சிலைகடுத்தனநடுத்துணிந்தனவால். (58)

எண்ணிமேலினிச்செய்துவனிதுவெனநெடியோ
னண்ணலாழியம்படையினைமுடுகவார்த்தெறிந்தான்
விண்ணிலாதவனெனச்செலக்கருகிநுண்மேனி
மண்ணின்மேல்விழவானடைந்தான்வித்துமாலி. (59)

உதிரவாரியுமூண்டுகொல்மண்டலத்தென்ன
வதிரவார்த்தனவலகைகள்பசிப்பிணியகன்ற
சதியிணுடைகம்நடித்தனகவந்தம்வெஞ்சமரத்
தெதிரும்வீரரிலுயிருளாருயிரெனவிருந்தார். (60)

வானிலந்தாதுந்துபிமுழங்கவவ்வானோர்
தேனுலாமலர்சிந்திடத்துயரொலாஞ்சிந்த
கானிலம்பொறைதீர்ந்திடவநுளறநடிப்ப
வானவந்தணர்வாழ்த்திடத்திருநகரடைந்தான். (61)

வேறு.

ஒற்றைமதிக்குடைநிழற்றவெண்கவரியிருபுறமுமுயர்ந்துலாவ
வெற்றிவலம்புரிமுழங்கமங்கையர்பல்லாண்டிசைப்பவியங்கள்விம்ம
முற்றுமதியமைச்சர்தொழமுனிவரருமுதியோருமுறையிற்சூழப்
பொற்றசும்பிற்புனல்பூரித்தந்தணர்முந்துறநகரம்புக்கான்மன்னோ.

வேறு.

பரந்தவெண்டிரைக்கடலுடைத்திருநிலப்பாவை
தெரிந்தகண்களோர்மூன்றினிலிரண்டையுந்தீர்ந்தே
வருந்துகின்றவவ்வருத்தநீத்திடும்படிமீட்டு
மருந்தவத்தினாற்பெற்றனமெனக்களித்தனளால். (63)

அடங்கலார்மணிபணிமுடிதாளினிலடங்கத்
தடங்கொடாழ்கடலுலகுயிர்ப்பயிரெலாந்தழைப்பத்
தொடங்கலாமகப்பயனெலாம்வானவர்துய்ப்ப
மடங்கலாசனத்திருந்தனன்மதிமகன்மகனே. (64)

நிலைநின்றமதாசலமெட்டுநீர்சூழ்?
முலகின்பொறைநொய்தெனவுள்ளமுவப்பினோங்க
வலகின்றியவானமுமாசையனைத்துமொன்று
யிலகுந்தனியாழிசெலுத்தினனின்பமிக்கான். (65)

உம்பர்க்கிறையோன்மணிப்பீடமுறைந்தவேந்தன்
கம்பக்கடன்மாநிலமின்னணங்காக்குநாளிற்
கும்பப்பெயராயன்வளர்த்திடுகோக்குமாரர்
செம்பொற்கழற்றுணையைச்சேர்ந்தமைசெப்புகின்றாம். (66)

போர்புரிபடலமுற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

---

*கலிங்கத்துப்பரணியாராய்ச்சிச்

சங்கோத்தரம்.

சேந்தமிழில் யான் வெளிப்படுத்திய "கலிங்கத்துப்பரணியாராய்ச்சி" பற்றி, அப் பரணியின் புதுப்பதிப்பாளர், ஸ்ரீமத்: அ. கோபாலையரவர்கள் எழுதிய 'சில குறிப்புக்களைப்' பார்வையிட்டேன். பரணிப்பதிப்பிற் செய்தற்குரியனவாக யான் குறிப்பிட்ட திருத்தங்களிற் பலவும் தமக்கு உடம்பாடே என்பதை—"பழைய நூல்களை அச்சிடும்விஷயத்தில் எத்துணையாற்றலுடையார்க்கும் சில தவறுகள் நேர்தல் இயற்கையென்பது ஆன்றோரறிந்தவிஷயமே; அவை ஆராய்ந்து திருத்தியமைக்கப்படவேண்டுமென்பதும் எல்லார்க்கும் ஒத்த துணிபே" எனக் குறிப்பித்துப்போந்த அவர் பெருமிதவுரை, குறிப்பிடத்தக்கதாம். ஆயினும், என்னாராய்ச்சிகளிலும் பிறழ்ச்சிகள் உள்ளனவென்றுகருதி, நான்கு விஷயங்களைக்குறித்து அவர் வாதிக்கின்றார். அவர் கூறும் வாதங்களை இனி நோக்குவோம்.

I. (i) கடைதிறப்பின்பொருள்.

கடைதிறப்பென்பது—கலிங்கப்போர்க்குச்சென்ற வீரராகிய தங் கணவரைப் பிரிந்த மகளிர் ஊடியுங் கவன்றும் பகலில் தம்வீட்டுக்கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயிருப்ப, சயங்கொண்டார் அவர் வீட்டு முகப்புக்களிற்சென்று தாம் பாடும் கலிங்கவெற்றியைக்கேட்கக் கதவுதிறக்குமாறு அவர்களை வேண்டுதலே என்பது பதிப்பாளர்கருத்து.

என்கருத்து—அபயன் அடைந்த கலிங்கவெற்றியைக் கொண்டாடும் விழாவுக்கு நகரத்துப் பல்வேறுமகளிரும் காலையிலெழுந்து ஒருவரையொருவர் துயிலெழுப்புவதே என்பது. என்கூற்றுப் பொருந்தாதென்பதற்கு அவர்கூறும் ஏதுக்களை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

(1) "கருணாகரன்றன் களப்போர்பாடக் கடைதிறமின்' என்று கடைதிறப்பைமுடித்து, மேலே 'களப்போர் விளைந்த கலிங்கத்து.... உறையுங்காடு பாடுவாம்' என்று புலவர் காடுபாடப்புகுதலால், கடை

*இவ்விஷயம் பற்றி இனி வரும் ஆக்ஷேபசமாதானங்கள் வெளியிடப்படமாட்டா. ப. ர்.

திறப்புப் புலவர்கூற்றன்றி நகரமகளிர்கூற்றெனல் தகாது" என்றார்.—கடைதிறப்புக்கு அடுத்த இயலின் தொடக்கத்தே 'காடுபாடுவாம்'என்று புலவர்கூறிய தொடர், தாம் பாடப்புகுவதைக் கேட்கும்படி வீரமகளிரைநோக்கியகூற்றென்பது எதனாற்பெறப்பட்டது? "நாடுகூறினும் நகரங்கூறுவாம்" என்ற கம்பர்வாக்குப்போல, அதிகாரங்களின் தொடக்கத்துக் கவி கொண்டுமொழியப்புகுவதை அது குறிப்பதன்றிக் கடைதிறந்தமகளிரைநோக்கிய கூற்றாகுமோ? "அணங்கினுக்குப் புதிய கோயிலுண் டதுவிளம்புவாம்' 'அவ்வணங்கை யகலாத வலகைகளை 'யினிப்புகல்வாம்' என இயல்களின் தொடக்கங்களினும், 'மன்னர் வீரனுந் தென்றிசைக்குப் புகுந்தமை செப்புவாம்' என நூலிடையினும் பாடியவாறே, நூல்கேட்போர் உணரும்படி புலவர் ஈண்டும் நுதலிப்புக்கார் என்பதன்றி, 'காடுபாடுவாம்' என்பது, கடைதிறந்தபின் மகளிரைநோக்கி, அவர் பிரசங்கஞ்செய்பவராயினர் எனல் பொருத்தமற்றதென்க.

(2) "இலங்கையெறிந்த கருணாகரன்ற னிசைவெஞ்சிலையின் வலி கேட்பீர்" என்று மகளிர் கேட்பவராகவே விளிக்கப்பட்டிருத்தலால், அக்கேட்பவரின் வேறான புலவரே பாடுபவரென்பது நன்கு விளங்குகின்றது" என்றார்.—தாம் பாடுவதைக் கேட்டுவக்கவே மகளிரைச் சயங்கொண்டார் விளிப்பவராயின், 'சிலையின் வலிகேட்பீர்' என்றதுபோலவே, அத்தாழிசையுட் 'களப்போர் கேட்கக் கடைதிறமின்' என்றன்றோ அவர் பாடியிருத்தல்வேண்டும்? கடைதிறக்கும்படி புலவர் வேண்டுவது மகளிர் கேட்பதற்கேயாகவும், பாடுவதையே ஈற்றுத்தாழிசைகளிரண்டாலும் அவர் வற்புறுத்தியதன் நோக்கம் என்னை? 'களப்போர்பாடக் கடைதிறமின்' என்பதற்கு 'நான் போர்பாடுவதை நீங்கள் கேட்கக் கடைதிறமின்' என்று, தங்கருத்துக்கியைய இழுத்துக்கொள்ளும்பொருளினும் "பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாட...வந்து திறவாய்" என்ற திருப்பாவைத் தொடருட்போல, 'நாமெல்லாஞ்சேர்ந்து களப்போர் பாடுதற்குத் திறமின்' என்பதே நேரான பொருளாகாதோ? இவற்றை அறிஞரே ஆராய்ந்து தெளியவல்லர். இலங்கையெறிந்த கருணாகரனது வெற்றிப்பாட்டைக்கேட்டு நீவிர் தெளிந்தவராதலின், அதனினுஞ் சிறந்த கலிங்கவெற்றியைப் பாடுதற்கு நீரே தக்கவரென்பது பின்னடியாற் பெறப்படுங் கருத்தாதலுங் கண்டுகொள்க.

(3) "மகளிர்கூற்றாயின் 'களப்போர்பாட வம்மினோ' என்றன்றோ, அமைந்திருத்தல்வேண்டும்" என்றார்.—'பாடக்கடைதிறமின்' என்றால், 'பாடுதற்காகக் கடைதிறந்து வம்மின்' என்பது பொருளாகாதோ? 'யான்பாடுவதை நீங்கள்கேட்கக் கடைதிறமின்' என்று இவர் கூறும் பொருளினும் 'கடைதிறந்து வம்மின்' என்பதுதானே கருத்தாகும்? ஆகவே வம்மின் என்னுமையால் நேர்ந்த இழுக்கென்னையென்க

(4) 'இரவிடை உறங்குமகளிரை விடியுமுன்னெழுப்பிப் பரணி பாடப்புகுவிக்குமுறை யாங்கும் கண்டதில்லை' என்றார்.—ஆயின், பகலிடைக் கதவடைத்திருக்கும் மகளிரைப் புலவர் சென்று வெற்றி கேட்பிக்கும் முறை, எங்குக் காணப்பட்டதோ? போர்க்குச் சென்ற தங்கணவரை நினைந்து ஊடியுங் கவலையுற்றும் பகலிற் கதவடைத்திருந்த மகளிரைப் புலவர் திறக்கவேண்டுகின்றார் என்பதே பதிப்பாளர் கருத்தாம். ஆயின், பிரிந்தநிலையிற் கணவருடன் ஊடுதல் மகளிர்க்கு எங்ஙனம் நிகழ்ந்ததோ? பிரிவிலே, கதவையடையாமலும் அவர்தம் ஊடலைநிகழ்த்துமிடத்து நேருந்தடை என்னோ? பதிப்பாளர் கருத்துப் படி, கடைதிறத்தற்குரிய மகளிரெல்லாம் போர்வீரர்மனைவியரே யாதலின், அவரெல்லாம் வீரக்குடியினர் என்பது பெறப்படும்; படவே, தம்மரசன்பொருட்டுப் போர்க்குச் சென்ற கணவரது வெற்றியேவிரும்பி அவர்க்கு நன்மையுண்டாகத் தம் தெய்வங்களை வாழ்த்தியிருப்பதன்றி, பட்டப்பகலில் ஊடியுங் கவன்றுங் கதவடைத்திருந்தனரென்பது, அக் குடிமகளிர்க்கு ஏற்காததென்க. 'அடல்வேலாடவர்க் கன்றியு மவ்வினமடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று' என்றும், "கன்னின்றானெந்தை கணவன் களப்பட்டான்......எய்போற் கிடந்தானென் னேறு" என்றும் வீரப்பெருமையால் அன்னோரைச் சிறப்பிப்பதே முன்னோர்மரபாதலுங் காணலாகும். ஆகவே, பழையவழக்கொன்றைப்பற்றிப் பரணிப்பிர பந்தம் பாடப்புக்க புலவரொருவரை, ஒவ்வொரு வீரர்மனைவியர்வீட்டிலும் பட்டப்பகலிற் கொண்டு நிறுத்துவதும், அம்மகளிரையெல்லாம் ஒருங்குகூட்டிப் பரணிப் 'பாட்டுக்கச்சேரி' பண்ணுஞ் சிரமத்தை அவர்க்குக் கொடுப்பதும் சிறிதும் அடாதனவே என்க.

(5) "'கோழியழைத்தன' 'ஆம்பல்வாய் கூம்பின' என்று திருப் பாவையுட்கண்ட விடியற்காலக்குறிப்பும் கடைதிறப்பில் இல்லை" என்றார்,

இரவிடை நிகழ்தற்குரிய கனவுநிலைகளையும் அக்காலத்துக் கணவருட னிருந்து நிகழ்த்துங் கலவிபுலவிகளையும் கூறி, 'புலர்ந்ததறியாதேகொழுந ராகவமளிமிசைத்துயில்வீர்' 'விடிவளவும் பொய்யேயுறங்கு மடநல்லீர்' 'விடிவளவுந் தேயுங்கபாடம்'. என்றும் புலவர் பாடுவாராயின் அவை விடியற்காலம் என்பதையன்றி வேறுகாலத்தையும் குறிக்குமோ? இதனி னும் வெளிப்படைவேண்டுவது எற்றுக்கென்க.

(6) "இவையெல்லாம் மகளிரியல்பு உணர்த்திநின்றவிசேடண மாவதல்லது காலக்குறிப்பாகமாட்டா" என்றார்.—விசேடணங்களாயின் பதிப்பாளர்கருத்துக்கேற்றவாறு பகல் மாலைக்காலநிகழ்ச்சிகளாலும் அம்மகளிரை விசேடித்திருக்கலாமே? இராவுச்செய்திகளும் விடிதலு மேகூறிப் புலவர்பாடியதென்? காரணமின்றியே, 'காலக்குறிப்பாக மாட்டா' என்னுங் கூற்று ஏற்கத்தக்கதன்றென்க.

(7) "அருவருப்பும் அச்சமுமிக்க பேயும்பிணமுமிக்க செருக்களத் தியல்பு முதலியவற்றை மகளிர்பாடுவது அவரியல்புக்குத் தக்கதுமன்று" என்றார்.—இதனால், அத்தகைய செருக்களத்தியல்புகளாகத் தாம் பாடப்புகுவனவற்றைக் கேட்கும்படி புலவர் மகளிரைவேண்டுதல் அவ ரியல்புக்குத் தக்கதென்பது பதிப்பாளர் கருத்தாகின்றது. தீய தொன்றைத் தாமேசொல்வதிலுள்ள அருவருப்பும் அச்சமும் பிறர்வாயி னின்று கேட்பதனால் உண்டாகா என்பது அவர் கொள்கைபோலும். பரணிப்போரைப் பாடுவது அன்றிக் கேட்பதொன்றின்கண்ணே கடை திறப்பு—மகளிர் நிறுத்தப்பட்டிருத்தலால், அருவருப்பும் அச்சமும் அவரைவிட்டொழியச் சிறிதும் இடமில்லையென்க. தம்மரசரது வெற்றித் திறங்களை மகளிர்பாடுவதும், அப்பாடல்களுட்புறத்துறைகள்பலவற்றை யும் புலவர்கள் கொண்டுமொழிவதும் பழைய மரபுகளே என்பதை முன் னூல்கள் உணரலாம்.

(8) "மகளிர்கலவிபுலவிகளை மகளிரே வியந்துபாடுதல் வழக்கா றில்லை" என்றார்.—அக்கலவிபுலவிகளை அவர்முன்னின்று ஆண்மக் கள் வியந்துபாடுவதுதான் வழக்காறுபோலும்; தம்மினத்தவராய்த் தம்முடன் வேற்றுமையற்றுப் பழகுந் தோழியரினும், பெண்பாலா ருடையகலவிபுலவிகளை அவர்முன்னின்றுகூறுமுரிமை ஆண்பாலார்க்கே

யுரியதென்பது விபரீதமேயாம். ‘நனவினிற் சயதரன் புணரவே பெறினும்’ ‘அவசமுற்று’ “கூடுமிளம்பிறையின்” என்பனமுதலிய புலவிவருணனைகளை ஆண்மகனொருவன் அம்மகளிர்முன்னின்று கூறுவனாயின், அவர் நாணி வெறுத்தோடுவதன்றி வேறும் நிகழுமோ? சயங்கொண்டார் அத்தகைய செய்கைக்கொருப்பட்டாரென்று கருதல் பெரியதோர் அபவாதமாமென்க.

(9) சோழனுடன் ஊடிக் கதவடைத்து நின்ற அவன் தேவியை விளித்துக் கூத்தர் கதவுதிறக்கப்பாடிய செய்யுளைத் தமக்கு ஆதாரமாகக் காட்டினார்.—தலைவன் தலைவியருள் ‘உணர்ப்புவயின்வாரா வூடல்’ நிகழும்போது, அறிவர், இடைநின்றுணர்த்தற்கு உரியர் என்னு மரபுபற்றி அப்புலவர் அவ்வாறு இடைநின்றனர். அதுபோற் சயங்கொண்டார் யாரது ‘நெடுந்துனி’யை இங்கே தீர்க்கலாயினர்? ‘ஊடினீர்’ என்பனபோலக் கடைதிறப்பில்வருங் கூற்றுக்கள், பதிப்பாளர்கருத்தின்படி மகளிரியல்புணர்த்தும் விசேடணங்களாதலின், அவை அவர்க்கு ஆதாரங்களாகாவாம்

(10) ‘களப்போர் பாடக் கடைதிறமின்’ என்றுமுடியுந் தாழிசைகள், தம் பதிப்புள் கடைதிறப்பினீற்றில் தாம் அமைத்தனவென்றும், மற்றப்பதிப்புக்களில் அவை இடையே காணப்படுவன என்றும், வேறு பதிப்புமுறையைத் தழுவிய நான், அவற்றை ஈற்றுத்தாழிசைகளாக எழுதியது மாறுமென்றுங் கருதி யெழுதினார். அத்தாழிசைகளைத் தக்ககாரணமின்றியே அவர் ஈற்றிலமைக்க, யான் அங்ஙனம் அமைத்தது சிறந்ததோர் ஆதாரம்பற்றியேயாகும். சயங்கொண்டாரை அடியொற்றிக் கூத்தர்பாடிய தக்கயாகப்பரணியுள்—

“வாசவனூர், குயிலாய்ப் பிறந்த கதைபாடக்
கூடக் கபாடந் திறமினோ

“சிரமொருவர், மூக்கா விழந்த கதைபாட
மூரிக் கபாடந் திறமினோ”

என்றும், அக்கூத்தர் நூலை அடியொற்றிப் பாடப்பட்ட இரணியவதைப் பரணியுள்—

"இரணியனைத், தாமங் கிடந்த கதைபாடத்
தகைபொற் கபாடந் திறமினோ"

"அவுணேசன், மடியிற் றுயின்ற கதைபாட
மாடக் கபாடந் திறமினோ"

என்றும் அவ்வப்போர்வெற்றிகளைப் பாடுவதே கடைதிறப்பின் கருத்தென்பதைக்கூறி அப்பகுதியை முடித்து, பின்னர், 'அணங்கின்.... காடுபாடுவாம்' என்று அடுத்தஇயல் தொடங்கப்பெற்றுள்ளது. இங்ஙனம், அடியொற்றிச் செய்யப்பட்ட நூல்களின் முறையே அவற்றின் முன்னூற்கும் முறையாம் என்பது நன்கு விளங்கலின், வேறுபதிப்புக்களிலே இடையிற்கண்ட தாழிசைகளிரண்டும் கடைதிறப்பினீற்றில் வைத்துப் படித்தற்குரியன என்பதே என் நோக்கமாமென்க. இவற்றால் பதிப்பாளர் என் கருத்திற்கண்ட தவறுகள் யாவும் தவறுதல் காண்க.

இனி, கடைதிறப்புக்கு யான்கூறிய கருத்தைத் தொகுத்து விளக்குவேன். 'கடைதிறமின்' என்று வேண்டப்படுவோர், தலைநகரத்துப் பல்வேறு மகளிருமாமென்பது முன்னரே ஆராய்ச்சியுள் நன்குவிளக்கப்பட்டது*. வீரர்மனைவியரே அதனுட் கூறப்படுவோரெனின்—'நனவினிற் சயதரன் புணரவே பெறினும்' 'நரதுங்கனொடணைவுறாது' என்பன முதலியவை அம்மகளிர்க்குச் சிறிதும் இயையாவாம். இயையுமேல், அவர் கற்புநெறி நிலைதலையும். அன்றியும், "காவலன் காவல் இன்றெனினின்று" ஆகிய மடவார்கற்பை அழித்தபழி அரசனையும், போர்முகத்தே தன் வீரரையெல்லாம் போக்கிவிட்டு அவர் மனைவியரிடம் அவன்புரிந்ததீச்செயலைப் புனைந்துபாடிய அபவாதம் புலவரையும் ஒருபோதும் விட்டகலாவாம். ஆகவே, அக்கூற்று யாவும் போலியே என்றும், யான் கூறியதே கருத்தென்றும் தெளியலாம். இனி, கடைதிறப்பு எனைப்பொழுதுகட்கு ஏற்காமை மேலே(5) பெறப்பட்டமையின், எல்லா மங்கலங்களுந் தொடங்கற்குரிய காலையே பாணிவிழாவின் தொடக்கத்துக்கும் உரியதெனல் நன்கு பொருந்தும். "பரணியாவது— காடுகெழுசெல்விக்குப் பாணிநாட் கூழுந் துணங்கையுங் கொடுத்து

*கலிங்கத்துப்பரணி (1) ஆராய்ச்சியுட் கண்டுகொள்க.

வழிபடுவதோர் வழக்குப்பற்றியது ; அது, பாட்டுடைத்தலைவனைப் பெய்துகூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று" என முன்னோர் எழுதுவர் (தொல். செய். 149, நச்.) இதனாற் கொற்றவைபொருட்டுப் பரணி நக்ஷத்திரத்தில் நடத்தும் விழாவொன்றுளதென்பதும், அவ்விழாவில் தேவியின்பொருட்டுக் கூத்தும் பலியுங் கொடுத்து வழிபடுவதுண்டென்பதும், அதனுள் தம்மரசனைப் பாட்டுடைத்தலைவனாக்கி அவன் வெற்றித்திறங்களைக் கொண்டாடுவரென்பதும் நன்கறியலாம். 'வழிபடுவதோர்வழக்குப்பற்றியது' என்பதனாலும் 'வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே' என்பதனாலும் அவ்வழக்கு, மக்கள்வழக்கே என்பது இனிது பெறப்படும். பதிப்பாளர் கருதியதுபோல்,* அது பேய்வழக்கன்று. பேய்வழக்காயின 'பேய்கள் வழிபடுவதோர் வழக்குப்பற்றியது' என்று விசேடித்துக் குறித்திருப்பரென்பது திண்ணம். 'கூழுந் துணங்கையுங்கொடுத்து வழிபடுவதோர் வழக்கு' என்பதனால், அவை கொடுப்போர் மகளிரேயாவர்; என்னை? "மள்ளர் குழீஇய விழவினானும், மகளிர் குழீஇய துணங்கை யானும்" (குறுந். ௩௧.) "இலங்குவளை மடமங்கையர்—துணங்கையஞ்சீர் தழூஉமறப்ப" (மதுரைக்காஞ்சி 159–60) என மகளிர்க்குரியதாகவே துணங்கைக்கூத்துக் கூறப்படுதலால் என்க. விழாக்காலங்களிற் கூழுந் துணங்கைமுதலிய கூத்துங் கொடுத்துத் தெய்வங்களை வழிபட்டுத் தம்மரசனையும் நாட்டையும் வாழ்த்துவது மகளிரது பண்டைவழக்காதலை—

"காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலப். 5, 67–73)

என்ற இளங்கோவடிகள்வாக்கானும் அறியலாம். இப்பரணிவிழாவும் அத்தகையதொன்றாகலின், அப்பயனது போர்ச்செய்திகளைப் பெய்து பாடப்புக்க சயங்கொண்டாரும், களப்போர்பாடிக் களிக்கும் இவ்விழா

* "பேய்கள் கூழ்சமைத்துத் துணங்கையிட்டு வழிபடுவதாக, இவர் தம் பதிப்பின் அரும்பொருள்விளக்கத்தொடக்கத்து எழுதியுள்ளார்.

வின் தொடக்கமாக, அதற்குரிய மகளிரின் துயிலெடை கூறலாயின ரென்றும், மார்கழிநீராட்டின்பொருட்டு மகளிரெல்லாம் வைகறையி லெழுந்து தந் தோழியரைத் துயிலுணர்த்துமாறுபோல, இவ்விழா வைக் கொண்டாடவேண்டி நகரமகளிர் ஒருவரையொருவர் எழுப்ப லாயினரென்றுங் கொள்வதே ஏற்புடைத்தென உணர்க. தக்கயாகப் பரணி, இரணியவதைப்பரணிகளுள் வருங் கடைதிறப்புக்களிலே, வானரமகளிர், நீரரமகளிர், மேரு கயிலைகளில் வாழுமகளிர் முதலியோர் கடைதிறக்க விளிக்கப்படுகின்றனர். பதிப்பாளர்கருத்துப்படி நோக் கின், கூத்தரும் இரணியவதைப்பரணியாசிரியரும், அவ்வானம மேரு முதலிய இடங்கட்கு நேரேசென்று, ஆண்டுத் தூக்கத்தாற் பகலிற் கத வடைத்திருக்கு மகளிரைக் கதவுதட்டுபவராகக் கூறல்வேண்டும். இஃது அசம்பவிதமேயன்றோ? இதனால், அவ்வவர் தோழியரால், அவ்வம்மக ளிர் விழாக்கொண்டாட அழைக்கப்படுகின்றார் என்பதே குற்றமற்ற தென்க. குறித்த விழாநாள் தொடங்கவும், இரவில் நிகழ்ந்த ஊடல் கூடல் முதலிய செய்கைகளால் அயர்ந்து துயிலெழாது காலையில் உறங் கிக்கிடக்கும் மகளிரை, அவர்செய்திகளைப் பலபடியாகவும் அசதியாடிக் கூறித் துயிலுணர்த்துமுரிமை,—'தாமே யவரே' என்ற வேற்றுமையற்ற அவர் தோழியர்க்கேயுண்டென்பது சொல்லாமலே அமையும். திருப் பாவையிற்போலத் தோழியர்பேச்சென்று வெளிப்படக் கூறவில்லையே யென்று பதிப்பாளர் சங்கிக்கின்றார். வெளிப்படக்கூறினராயின், வே றாராய்ச்சிக்குமிடமுண்டோ? முன்னோரால் விளக்கப்படாத கடைதிறப் பின்கருத்தை, அப்பகுதியுட் கூறப்படுவனவற்றோடும் பண்டை வழக்குக்களோடுங்கூட்டி ஏற்பதொன்றைக் கொள்வதே உரியதென்க. தம் அரசனது பெருவெற்றியைக் கேட்டதும், அதனைத் தம் தலை வியர்க்குக் காலையிற்சென்று துயிலெழுப்பியுணர்த்திப் பாட்டொடு தொடுத்து வாழ்த்துவது அவராயத்தார் கொண்டொழுகிய மரபென்பது, செங்குட்டுவனது வடநாட்டுவெற்றியைத் தெரிந்த ஆயச் செவிலியர், அதனை அவன் தேவிக்கு அங்ஙனமுணர்த்திப்போந்ததால் தெளியலாம். இதனை—

"வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்
குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்ற
... ...

துணையணை பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு
எறிந்துகளங் கொண்ட வியறோர்க் கொற்றம்
அறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்லாண்டு வாழ்த்த"

(சிலப். 27, 195—213)

என்னும் இளங்கோவடிகள்கூற்றால் அறிக. விழாக்காலங்களிலே துணங்கை குரவை முதலிய கூத்துக்களையும், அம்மானை பந்து ஊசல் முதலிய ஆட்டங்களையும், தம் அரசனது போர்வெற்றிகளைப் புனைந்து பாடிக்கொண்டே நிகழ்த்துவது மகளிர்வழக்காதல், சிலப்பதிகாரமுதலிய முன்னூல்களால் தெளியத்தக்கது. அங்ஙனம் பாடுவது, வேந்தன் வெற்றித்திறங்களேயாயின், அவற்றுட் களவழிமுதலிய புறத்துறைகள் பலவும் அமைதல் கூடியதன்றோ? அதனால் செருக்களத்தியல்புகளைப் புலவர் மகளிர்கூற்றாகக் கொண்டுகூறிச் சிறப்பித்ததனாற் குற்றமென்னை எனக. இவற்றால், கடைதிறப்புக்கு யான்கூறிய கருத்து, எக்குற்றத்துக்கும் இடமின்றி, முன்னூல்வழக்குக்களோடும் சயங்கொண்டார் குறிப்புக்களோடும் பெரிதும் ஒத்துமுடிதல் தெளியலாகும்.

II. (4) பேய்விழிப்பின் உவமை.

"கொள்ளி கொண்டிரண் டேமுழை யுட்புகக்
குன்றி தோன்றுவ போல விழிப்பன"

என்ற தாழிசைத் தொடர்க்கு "இரண்டு அம்புக்கூட்டினுட் புகுந்த அக்குன்றிமணி தோன்றுதல்போல விழிப்பன" என்று பதிப்பாளர் பொருள் கூறினர். பேய்விழிப்புக்கு இங்ஙனங் கூறும் உவமை சிறவாமையால், பாடமும் பொருளும் வேறுமென்று கருதி, சென்னை இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பாணிப்பிரதியொன்றிற் கண்ட 'குன்று தோன்றுவ' என்ற பாடம்† பொருட்பொருத்தமுறுதலை விளக்கினேன்.

---

†இப்பாடம், ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார் பதிப்பித்த அச்சுப்பிரதியினும், கீழ்க்குறிப்பில்வைத்துக் காட்டப்பட்டிருத்தல் காண்க. 'கொள்ளி கொண்டிரண் டேவி(வி?)டையுட்புக' என்று பிரதிபேதமும் உண்டு.

இப்பாடம் நான் திருத்தியதென்றுகொண்டு அவர் குற்றங் கூறுகின்றனர். யாவர்க்கும் பொதுவாகக் காட்சிச்சாலையுள் வைக்கப்பட்டுள்ள பாணிப்பிரதியைக் குறிப்பிட்டுக் காட்டியவிடத்தும் இங்ஙனங் கூறுவார்க்கு, மெய்ப்பிக்கும்வகை வேறியாதோ? தம் பாணிப்பதிப்புக்கு உதவியாகச் சென்னை இராசாங்கக்கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதிகளை ஒப்பிட்டுப்பார்த்ததாக இவர் முகவுரையுள் எழுதியுள்ளார். அதன் பிரதியொன்றனுள் அமைந்துள்ள பாடத்தை, நான் திருத்தியபாடமாக எழுதியதினின்று, அப்பிரதிகளை இவர் பார்த்தவரல்லர் என்பது பெறப்படுதலோடு, மற்றப் பிரதிகள் பலவற்றையும் ஒப்பிட்டதாகக்கூறும் கூற்றையும் உறுதியற்றதாக்குகின்றது. மேலும், இவ்வாறே நான் பாடங்களைத் திருத்தத் துணிந்தவனென்றும், தமக்கு அத்துணிவில்லையென்றும் பெருமிதம்பாராட்டுகின்றார். ஏடெழுதுவோராலும், பிறழக் கேட்பதனாலும், மாறுபடப் படிப்பதனாலும் பாடங்கள் பிரதிகளிற் சிதைய வழங்குதலுண்டென்பதும், அவற்றை ஆராய்ச்சிசெய்து உண்மைப் பாடங்காண்பதே பதிப்பாளர்கடமை என்பதும் யாவருந் தெரிந்தவை. 'பிரதியிலுள்ளவற்றைச் சிறிதும் மாற்றத் துணியக்கூடாது' என்று சங்கற்பிப்போர் வெளியிடும் நூல்கள் பிழைகள்மலிந்து, சிலசமயங்களில் நகைப்புக்கு மிடமாகும். இம்முறை, அச்சிட்டவற்றைப் படிக்கும் இக்காலத்தார்க்குமட்டுமன்றி, ஏடெழுதிப்படித்த முன்னோர்க்கும் ஒத்ததே. "அறம்பொருளின்பமுயிரெச்சம்" என்றும் "சலத்தாற் பொருள்செய்தேமாத்தல்" என்றும் எல்லாருங்கொண்டு உரை கூறி வந்த பாடங்களைப் பரிமேலழகர் தம் நுட்பமதியால் ஆராய்ந்துகண்டு 'உயிரச்சம்', 'ஏமார்த்தல்' என்றிருக்கவேண்டும் என்று கொண்டார்; இங்ஙனங் கொண்டது தவறென்னலாமோ? இன்னும் எத்தனையோ உதாரணங்கள் இதற்குள்ளன. கவிபிருதயமான பாடங்கள் பிரதிகளில் மாறுபட்டுக்கிடப்பனவற்றை ஆராய்ந்துகண்டு திருத்துவதைக் குற்றமுள்ள துணிவென்று நல்லறிஞரெவருங் கூறார். மற்று, ஆராய்ச்சியின்றி மனம்போனவாறு சுத்தபாடங்களைப் பொருட்பேறு சிதையத் திருத்துந்துணிவே குற்றமுடையதென்க. முற்கூறிய துணிவைச் சிலவிடங்களில் யான்கொள்ள நேர்ந்தது உண்மையே. அதுபற்றிப் பிறர் கூறும் இகழ்ச்சிகள் யாவும் புகழ்ச்சியே என்க.

இனி, இராசாங்கப்பிரதியுட்கண்ட பாடத்தில், பாணிப்பதிப்பாளர் கூறிய குற்றங்களை நோக்குவோம்.

(1) "கொள்ளி கொண்டிரண் டேமுழை யுட்புகக்— குன்றுதோன்றுவபோலவிழிப்பன" என்ற பாடத்துக்கு யான் கொண்ட கருத்து, "கொள்ளிகளைக்கொண்டு இரண்டு முழையுட் புகும்போது குன்றுகள் தனித்தனிதோன்றுமாறுபோல (பேய்கள்) விழிப்பனவாய்த் தோன்றுவன" என்பதே. இப்பொருளில், 'கொள்ளிகொண்டு இரண்டு முழையுட் புகுவன யாவை' என்றார்; 'கொள்ளிகொண்டு இரண்டு குகைகளுட் புகும்போது' என்ற வாக்கியத்துள், புகுதல்வினை, அவ்வினை நிகழ்த்தற்குரியவிடத்தன்றி வேறிடத்துஞ் செல்லுமோ? 'இருட்டறையி லேதில்பிணங் தழீ இயற்று' 'கீழ்நீர்க்குளித்தானைத் தீத்துரீஇயற்று' என்ற தொடர்களிலே, தழுவல் துருவல்வினைகள் அவற்றுக்குரிய மக்கட்குரியனவேயன்றோ? அவற்றின் வினைமுதல்களை வள்ளுவனார் கூறாமைபால், பதிப்பாளர்கருத்தின்படி. 'குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி' என்ற விதிக்கு அவர் கூற்றுக்கள் மாறாதும்போலும்.

(2) "'இரண்டே'என்ற ஏகாரத்துக்குப் பொருளென்ன"என்றார். பொருளுள்ள ஏகாரந்தான் பாடல்களில் அமையவேண்டும் என்பது இவர் கொள்கைபோலும். 'தலையுடனமர்ந்தேயாடுகழை' 'கைக்கேகூழை வாரீரே'என்பனமுதலிய பரணியில்வரும் ஏகாரங்களை ஆராய்ந்துதெளிக. இனி, 'நெருப்பைக் கொண்டு இரண்டு அம்புகள் (ஆக்கினேயாஸ்திரங்கள்) இருகுகையுட் புகுங்கால் குன்றுகள் தனித்தனி தோன்றுமாறுபோல (பேய்கள்) விழித்துத்தோன்றுவன' என்று இதற்குப் பொருள்கூறலும் பொருந்தும். இரண்டென்பது ஈண்டுமுழையுடனும்இயையும். கொள்ளி-நெருப்பு; 'கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க' என்ற நெடுநல்வாடையடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருளும் காண்க.

(3) 'குன்று தோன்றுதல் விழித்தற்கு உவமையாகுமா' என்றார். 'குன்றுகள் தனித்தனியே தோன்றுவனபோலப் பேய்கள் தனித்தனி விழிப்பனவாய்த், தோன்றுவன'என்பதே கவியின்கருத்து பொருளடையாகிய 'தோன்றுதல்' ஈண்டு உவமைக் கண்ணும் கூட்டப்படும். உவமை

யடைபொருளடைகளைக்கூட்டி முன்னோர்செய்யுட்குப் பொருள்கோடலைச் "சமன்செய்து" முதலிய குறளுரைகளுட் கண்டுகொள்க.

(4) "வற்றியுலர்ந்த கள்ளிமரங்களும் பனைமரங்களும் உவமையாகச் சொல்லப்படும் பேய்களுக்கு மலையை உவமையாகச் சொல்வது வழக்காறுகுமா? முன்னடியில் 'ஒட்டியொட்டு விடாதகொடிற்றின' என்ற பேய்களைப் பின்னடியில் குன்றோடு உவமிப்பது பொருந்துமா?" என்றார். வற்றியுலர்ந்த கள்ளியைப் பேய்க்கு உவமையாகப் பாணி கூறிய இடம் யாது? "கருநெடும்பனங்காட்டுமுழுமையுங் காலுங்கையு முடையனபோல்வன" என்புழி, 'நெடும்பனங்காடு' என்ற புலவர் கூற்று அதன் குறுகியதோற்றத்தையே குறிக்கும் என்பது விபரீதமே. 'வன் பிலத்தொடுவாதுசெய்வாயின' 'தட்டி வானைத் தகர்க்குந் தலையின' 'ஒட்ட லொட்டகங் காணிலென் பிள்ளையை—ஒக்கு மொக்குமென் றெக்கலைக் கொள்வன'என்று அடுத்துவருகின்ற பேயுவமைகளும், அவற்றின் குன்றொத்த நெட்டுருவத்தையன்றிக் குறுகிய உருவையோ குறிப்பன? பேய்வருணனைகளாகக் கண்டன யாவும் அவற்றின் பெருந்தோற்றத்துக் குரியனவாகவே அமைந்திருத்தலைப் பாணிநெடுக அறியலாம். அங்ஙன முள்ளவை, பசியால் இளைத்தொடுங்கிய நிலையே 'பேய்களைப்பாடியது' என்ற பாணியியலிற் கூறப்படுவது. பேருருக்கொண்ட யானை பசியால் உடல்வற்றியதெனின் அது பூனையாகாது; வயிறாரவுண்டு உடல் தடித்த தெனின் அஃது இமயம் ஆகாது; தன் ஆகிருதியினின்றும் ஒடுங்கியும் பருத்தும் வேறுபட்டதென்பதே கருத்தாதல்போல, அத்தகைய பேய் களும் உணவின்றி யொடுங்கியும் உணவுண்டு பருத்தும் மாறின எங்க. எனவே, பேய்களை, தனித்தனிக் குன்றுகளாகவும், "சுழலு மழல்விழிக் கொள்ளிவாய்ப் பேய்" (பதிளே. மூத்ததிருப் 2, 7) என்றவாறு அவற் றின் தீவிழிக்கும் கண்களைக் கொள்ளிகொண்ட இருமுழைகளாகவும் கூறப்பட்ட உவமை, அவற்றைப் பேருருவமுடையவாகவேவருணித்து வரும் புலவர்கருத்துக்குப் பெரிதும் இயைபுடையதாதல் தெளிக. கூழுட்டுண்டு பேய்கள் உடல்தடித்ததைச் சிறப்பிக்குமிடத்தே—

"பருத்துநின்ற, குன்றுதுனிப்பன போர்க்களத்துக்
குடம்பிட் டோட மிட்டனவே. (572)

என்று சயங்கொண்டாரே பாடுதல், பேய்கட்குக் குன்று உவமையாகாது என்று ஒருதலையாகத் துணிந்த பதிப்பாளர்கருத்துக்கு முழுவிரோத மன்றோ! 'கூழின்றிப் பசியால் ஒடுங்கிய குன்றுபோல முன்பிருந்த பேய்கள், வயிறாவுண்டதும் பருத்தகுன்றுபோலாயின' என்பதே ஈண்டுக் கவி கருதியதென்பது அறிஞர்க்கெல்லாம் நன்குவிளங்கத்தக்கது.

இனி, இராவணனது படைக்காட்சியில் மூலபலத்தை வருணித்து வருமிடையே, "மறக்கண் வெஞ்சின மலையென விருந்தன்ற வயவர்" என்று அரக்கரது குன்றொத்த உருவைக் குறிப்பிட்ட கம்பநாடர், அவர் கண்களை—

"தீவந் தோன்றிய முழைத்துணை யெனத்தெறு கண்ணர்"

என்ற தொடராற் சிறப்பிக்கின்றார். 'தீபங்கள் பிரகாசிக்கும் இரண்டு மலைக்குகைகளைப்போல எரியும் கண்களையுடையவர்' என்பது இதன் பொருள். இதனால், கொள்ளிகளைக்கொண்ட இரண்டு மலைமுழைகளைப் பேய்விழிகட்கு, உவமைகூறிய சயங்கொண்டாரைப்போலவே, கம்பநாடரும், தீபங்களைக்கொண்ட இருமுழைகளை அரக்கர்விழிகட்கு உவமை கூறியது காணலாம். தமக்குமுற்பட்ட சயங்கொண்டார் பேய்விழிக்குக் கூறிய ஒப்பைத் தாம் அரக்கர்விழிக்கு எடுத்தாண்டதற்கு, ஒரு பொருத்தங் கற்பிப்பவர்போலக், கம்பர், "கூளிகட்கு நல்லுடன்பிறந்தார்" என்று அவ்வரக்கரைப் பேயின் இனத்தவராக முன்பாட்டிற் கூறிப் போந்தமையும் ஈண்டு உணரத்தக்கது. [நல்லுடன்பிறந்தார் என்பது 'நல்லம்மான்' என்பதுபோல, நெருங்கிய உறவுமுறையைக் குறிக்கும்] இவற்றாலும், எரியைக்கொண்ட இருமலைமுழைகளைப் பேருருவுடைய பேய் அரக்கர்போன்றார்க்கு உவமைகூறுவது, பண்டைப்புலவர்கொண்ட வழக்கே என்பது தெளியலாம்.

இனி, பாணிப்பதிப்பாளர்பாடத்தை நோக்குவோம். " 'கொள்ளி கொண்டு......விழிப்பன' என்பது, கொள்ளிக்கட்டைகளைக் கையிற் கொண்டனவாயிருந்துகொண்டு, இரண்டு அம்புப்புழைபுட்புக்க செங்குன்றி தோன்றுமாறுபோலத் தோன்றுமாறு, சிவந்தாழ்ந்தகண்களை விழிப்பன என்று பொருள்பட்டுச் சிறுகட்பேய்களின் விகாரவடிவு புலப்படுத்தற்குரியதாகின்றது;" என்றார்.—இப்பொருளின்படி, 'கொள்ளி

கொண்டு' என்ற வினையெச்சம், 'விழிப்பன' என்ற வினையுடன் இயையும். பேய்கள் விழிப்பதற்கு உவமைகூறவந்தவிடத்தே, 'கொள்ளி கொண்டு......விழிப்பன' என்று புலவர் கூறியதெற்றுக்கு? உவமேயத்தை விசேடிப்பதனேக்கம், உவமைக்கு ஒருபொருட்பேறு சிறக்கவேண்டுமென்பதேயன்றோ? அச்சிறப்புக்கிடமின்றி, நின்றுவற்றும் படி கொள்ளிகொண்டென்பதைப் பெரும்புலவர் கூறினரெனல் பொருந்துமா? 'கொள்ளிவாய்ப்பேய்' என்பதன்றிக் கொள்ளிக்கட்டை யைக் கையிற்கொண்டிருத்தல் பேய்க்கியல்பு என்பது யாங்குக்கண்டது? இனி, 'ஏழுழை—அம்புப்புழை' என்றார். எயிலுறுப்பொன்றற்கு வழங்கும் 'ஏப்புழை' என்பது இவர்கருத்துப்படி அம்புக்கூட்டுக் காயினும், ழுழை என்பது கூடு என்ற பொருளில் வழங்குவதியாண்டு? பேயின்கண்களுக்கு முரசம் (பட்டினப்—236), பறை (சிலப்—26, 20; பதிற்றுப். மூன்றாம் பதிகம்—2, 1) போலும் உவமைகளன்றி மிகச் சிறிய குன்றியை யொப்புமைகூறிய இட முண்டா? பெருவடிவினவாகச் செடங்கொண்டார் வருணித்துப்போந்த பேய்களைச் சிறியவடிவினவாக முதலிலே கருதிவிட்டவர்க்கு, அவற்றின் பெருங்கண்களும் சிறுகித் தோன்றுதல் இயல்பேயன்றோ?

III. (19) பாடச்சிறப்பு.

'அபயன் பொருஞ் சேனைவீரர்' என்றபாடத்தினும் 'அபயன் பெறுஞ் சேனைவீரர்' என்று சங்கத்துப்பிரதியிற் கண்டபாடம், கவர்பொருட்கு இடமின்மையாற் சிறந்ததென்பது என்னுற் காட்டப்பட்டது. சந்தர்ப்ப நோக்கிப் பொருள்கொள்ளவேண்டும் என்பதற்கு வேண்டிய நியாயங்கள் கூறி, அவ்வாறு நோக்கும்போது தம்பாடமே சிறப்புடைத்தாம் என்றார். பதிப்பாளர்பாடம் சந்தர்ப்பத்தாற் பொருள்பயவாதென்று யான் அத னுட் குற்றங்கூற வந்தவனல்லன். மற்று, சந்தர்ப்பநோக்காமலே பொருள்கொள்ளத்தக்கபாடம் அதுநோக்கிக் கொள்ளும்பாடத்தினும் சிறப்புடையதென்பதே என் கருத்து. விளங்கவைக்குஞ் சொல்லும் பாடமும் பெறுதவழியன்றோ, ஆற்றல் சந்தர்ப்ப முதலாயினவற்றுற் பொருள்கொள்ளவேண்டுவது? அவையுள்வழி, உய்த்துணர்வு எற் றுக்கு எனக.

IV. (25) வெள்ளணிநாள்.

"எற்றைப் பகலினும் வெள்ளணிகாண்
இருநிலப்பாவை தனைநிழற்றுங் கொற்றக்குடை"

என்ற தாழிசைத்தொடருள் 'வெள்ளணிகாண்' என்று பதிப்பாளர் திருத்திய பாடத்தினும் 'வெள்ளணிநாள்' என்ற பழம்பாடமே பொருள் சிறந்துநிற்றலை விளக்கினேன். "வெள்ளணியென்பதே பிறந்தநாட் சிறப்பு என்றபொருளில் வழங்கப்படுதலால், நாளென ஒருசொற்பெய்து மீண்டும் அப்பொருளே பெறவைத்தல் கவிகருத்தன்று" என்றார். "வெள்ளணி"யென்பதற்குப் 'பிறந்தநாளொப்பனை' என்பதே பொருளாம்; இதனைச் சிலப்பதிகார அரும்பதவுரையாலும் (27, 229),நச்சினார்க்கினிய ரெழுத்தாலும் (சீவக 114) அறிக. [ஒப்பனை - அலங்காரம்] 'பிறந்த நாள்வயிற் பெருமங்கலமும்' என்ற தொல்காப்பிய சூத்திரப்பகுதிக்கு நச்சினார்க்கினியர் —"சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான நாளிடத்துநிகழும் வெள்ளணியும் என்றுபொருளும் "மங்கலவண்ண மாகிய வெள்ளணியணிந்து எல்லாவுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்த லின் அதனை வெள்ளணியென்ப" என்று விசேடமுங் கூறினர். இதனா லும், பிறந்தநாளிலொப்பனை என்பதே அவர் கருத்தாதல் காண்க. பதிப் பாளர்கருதியவாறு 'பிறந்தநாட்சிறப்பு' என்ற பொருளையே அவர் கருதியவராயின்—வெள்ளணியென்பதே அப்பொருளை விளக்குதலால் சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான வெள்ளணியும்—என் றெழுதியிருப்பாரன்றி, பிறத்தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியும் என்று முன்வந்தபொருளே பின்னும்வர எழுதா ரென்க. இவையெல்லாம் ஆராயாது 'வெள்ளணியென்பதே பிறந்தநாட் சிறப்பு என்ற பொருள்பயக்க, நாளென்பது மிகையாம்' என்றார். பிறந்தநாளொப்பனைக்கு வெள்ளணியென்ற வழக்குப்போலவே, பிறந்த நாளுக்கு 'வெள்ளணிநாள்' என்பதே பண்டையவழக்காதலை—

"கரும்பகடும் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்"

(புறப். வெண். 9, 24)

"மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்தி"

(தொல். புறத். 34, நச்.)

என்பன முதலிய முன்னோர்கூற்றுக்களாற் றெளிக. பதிப்பாளர் பாடப்படி, "எற்றைப்பகலினும் வெள்ளணிகா ணிருநிலப்பாவை" என, நிலப்பாவைக்கு எல்லா விசேடணங்களையும் இணைக்குமிடத்து, கொற்றக் குடைக்கு விசேடணமேயின்மையால், அக்குடையைச் சிறப்பிக்கப் புகுந்த புலவர்நோக்கம் பழுதாதலேயன்றிப் பொருட்பேறும் சிறவாதொழியும். அதனால், "எற்றைப்பகலினும் வெள்ளணிநாட்சிறப்பை நிலப்பாவைக்குத் தன் நிழலாற்புரியுங் கொற்றக்குடை" என்ற பொருணயம்கொண்ட பழம்பாடமே புலவர்கருதியதாதலை ஆராய்ந்து தெளிக. இதுகாறுங் கூறிப்போந்தவற்றால், பாணிப் புதுப்பதிப்பாளர் என்னாராய்ச்சிகள் சிலவற்றுட் கண்ட குற்றங்கள் யாவும் நற்றங்களாதல் யாவர்க்கும் நன்குவிளங்கத்தக்கது.

மு. இராகவையங்கார்.

ஸ்ரீ:

மதிப்புரை.

நல்லிசைப்புலவர்கள்.—இது, மதுரை அமெரிக்கன்காலேஜின் தலைமைத்தமிழாசிரியர் ஸ்ரீமத் ஆ. கார்மேகக்கோனாரவர்களால் பெருந்தலைச்சாத்தனார், உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார், கோவூர்கிழார், பெருஞ்சித்திரனார், பிசிராந்தையார், ஔவையார் என்னும் சங்கமருவிய தண்டமிழ்ப்புலவர்சரிதங்களை நன்குணருமாறு இதுகாறும்வெளிவந்த பழந்தமிழிலக்கிய விலக்கண நூல்களிலும் சிறந்தபண்டிதர்க ளெழுதிய ஆராய்ச்சிகளிலும் ஆங்காங்குக் குறிக்கப்பட்டிருக்கும் விடயங்களை ஆசாக அமைத்துக்கொண்டு இடையிடையே ஆண்டைக் கின்றியமையாத நிகழ்ச்சிகளை உய்த்துணர்வான் மடுத்து ஒருகோவைப்படத் தொடுத்து, அறிவுவளர்ச்சிக்குரிய பற்பல முதுநூல்களுட்கூறிய முடிபொருள்களையும் இடநோக்கியமைத்து இயற்கைவனப்பும் காவியச்சுவையும் தோன்ற வுயர்ந்த தமிழ்நடையா லெழுதப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பவர்களுக்கு அத்தமிழ்ப்புலவர்களின்சரித முணர்த்தலேயன்றி, தமிழ்ப்பயிற்சிவளர்ச்சிக்கும் இது உதவியாயிருக்குமென்று தோன்று

கிறது. இதன் விலை அணா 14. வேண்டுவோர் மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரம் ஸ்ரீமத் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களிடம் பெறலாம்.

தனித்தமிழ்க்கட்டுரைகள்.—இது, பல்லாவரம் வித்யோதயா மகளிர்கல்லூரியின் தமிழாசிரியராகிய திருவுடைய நாகைநீலாம்பிகையம்மை என்பவரால், பல தமிழிதழ்களில் நாளடைவில் எழுதிவெளியிட்டுவந்த கட்டுரைகளை ஒருங்குதிரட்டிப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்கண் 1 கல்வியும் தாய்மாரும், 2 ஒழுங்கானகல்வி 3 கற்றலிற் கேட்டலே நன்று, 4 நாகரிகமும் மொழிவளர்ச்சியும், 5 தனித்தமிழ்ப் பாதுகாப்பு, 6 தமிழைப்பற்றியவினாக்களுக்கு விடை, 7 தமிழில் வடமொழிகலத்தல் ஆகாது, 8 சென்னைப் பல்கலைக்கழகக் கட்டாயக்கல்வி, 9 நாவலந்தீவின்பழையகுடிகள், 10 பெண்மக்களின் அறிவும் ஆண்மையும், 11 உயிர்போன உடம்பை என்செய்வது, 12 இறந்தோர்வீட்டிற்குச் செல்பவரும்: அவ்வீட்டினரும், 13 பெண்பாலார்க்கே கொல்லாமை முதன்மையாம் என்னும் பதின்மூன்றுகட்டுரைகள் இக்காலத்துச் சீர்திருத்தமுறைபற்றிச் சிறுவர்களும் படித்துணருமாறு தெளிவான செவ்விய தமிழ்நடையி லெழுதப்பட்டுள்ளன. இவற்றின் நுவல் பொருள்கள்பலவும் பெரிதும் மேற்கொள்ளத்தக்கன. கட்டுரையெழுதிய திறமையும் பாராட்டத்தக்கதே. ஆயினும், சில புதியகோட்பாடுகளை மேற்கொண்டெழுதியிருக்குமவைகள் இன்னும் ஆராய்ந்துதெளியத்தக்கன. இதன் விலை ரூபா ஒன்றேகால். வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

இந்தியதேசீயகீதங்கள்.—இது, பஞ்சாமிர்தம்பத்திராதிபர் ஸ்ரீமத் அ. மாதவையரவர்களாற் பல வருணமெட்டுக்களும், பண்களு மமையப் பாடிய பலபாடல்க ளடங்கியது. இதில் இக்கால நாகரிகமுறைபற்றி இந்தியர் முன்னேற்றமடைதற்குரிய வொழுக்கங்களும் போதனைகளும் சொல்லப்பட்டுள்ளன. தேசீயகீதம் பாடுவோர்க்கெல்லாம் இது மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை அணா 3. வேண்டுவோர் மானேஜர், பஞ்சாமிர்தம் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

வைத்தியசந்திரிகா:—இது, கரூரைச்சார்ந்த நெரூரிலிருந்து சுதேசவைத்தியமுறை முதலியவற்றின் வளர்ச்சிகருதி மாதமொருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் ஆசிரியர் பண்டிட் ஸ்ரீமத். S. நாராயணையங்காரவர்களாவர். இதில், வடமொழிவைத்தியநூல்களிலும் தமிழ்வைத்தியநூல்களிலும் சொல்லும் முறைகளையும், சித்தர்முறைகளையும் ஆராய்ந்து விஷயங்கள் சிறுவர் சிறுமியரும் படித்துணரும்படி தெளிவானநடையில் எழுதப்பட்டுள்ளன. இதன் வருடச்சந்தா உள்நாட்டுக்கு ரூபா இரண்டு. வெளிநாட்டுக்கு ரூபா மூன்று. வேண்டுவோர் காரியஸ்தர், வைத்தியசந்திரிகா, நெரூர், கரூர் என்ற விலாசத்திற் பெறலாம்.

விசால ஹிருதயம்:—இது, பத்மநாபபுரம் ஸ்ரீமத். இராமசுப்பிரமணியநாவலரால் மாதமொருமுறை வெளியிடப்படும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில் தமிழ்நாட்டின் மேன்மையையும் தமிழின்மேன்மையையும்பற்றிய விஷயங்களும், வர்த்தமானங்களும் கதைகளும் பிறவும் வெளியிடப்பெறுமென்று தெரிகிறது. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா ஒன்று. வெளிநாடுகளுக்கு ரூபா ஒன்றேகால். தனிப்பிரதி விலை அணா இரண்டு. வேண்டுவோர் இராமசுப்பிரமணியநாவலரவர்கள், விசால ஹிருதயம் ஆபீஸ், பத்மநாபபுரம், தக்கலைபோஸ்டு என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

தமிழ்மக்களுக்கோர் விண்ணப்பம்.

அன்புடையீர்!

தமிழ்நாட்டில் தோன்றிய நாம் நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியைப் போற்றிவருகின்றோம். அம்மொழியைப் போற்றுவது போலவே அம்மொழியிற் சிறந்த புலவர்களையும் போற்றிவருகின்றோம். அப்புலவர்களிற் கம்பநாடுடையவள்ளலும் ஒருவர் என்பதைத் தமிழ் மக்கள் உணர்வார்கள். அக்கவிச்சக்ரவர்த்தி சோழநாட்டில் உள்ள திருவழுந்தூரிற் பிறந்தவர் என்பதையும் நாம் அறிவோம். அவ்வள்ளல் பிறந்த இடமாகிய கம்பர்மேடானது நாளதுவரையிலும் யாதொரு ஞாபகச்சின்னமும் இல்லாதிருந்துவருகின்றது.

மேல்நாட்டு ஷேக்ஸ்பியர்முதலியபெரியோர்களுக்கு அந்நாட்டார் ஞாபகக்குறிகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்பதை அறியாதார் ஒருவருமிலர். அறிந்திருந்தும் நமது புலவர்பெருமக்கள் தோன்றிய இடத்தில் ஞாபகக்குறியொன்றும் ஏற்படுத்தாமலிருப்பது தமிழ் மக்களாகிய நமக்கு ஓர் இழிவாக இருக்கின்றது.

ஆகையால், தமிழன்பர்களே! திருவழுந்தூரில் அக்கம்பநாடர் தோன்றிய இடத்தில் நாம் அவருடையஞாபகத்துக்காக ஓர் கட்டடம் கட்ட ஏற்பாடுசெய்யவேண்டும். அப்புலவர்பெருமானின்பெருமையை அறியாதார் ஒருவருமிலர். இதற்குத் தகுந்தவற்பாடுகளைச் செய்யக் கடமைப்பட்டவர்கள் தமிழரே.

தமிழ்மக்களே! தமிழன்பர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் இதற்காக உழைக்க முன்வருவதோடுகூட அவரவர்கருத்தைப் பத்திரிகையின் வாயிலாக வெளியிடவும் வேண்டுகின்றேன்.

மா. சுவாமிநாதன்,

தஞ்சை.

பிழையுந் திருத்தமும்.

(மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமும்.)

[செந்தமிழ்த்தொகுதி—22.]

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
192	21,22	ஐம்பத்துநான்குதிங்களாயின	ஐம்பத்தைந்துதிங்களாயின
,,	25	ஐம்பத்துநான்குதிங்கள் ...	ஐம்பத்தைந்துதிங்கள்
195	14	கண்ணகியம்மையுங் கோவலனுஞ் ...	கோவலன்
196	3,4	இவ்வைகாசித்திங்களுக்குப் பதினொன்றாந்திங்களாகிய சித்திரை ...	இவ்வைகாசித்திங்களுக்குப் பன்னிரண்டாந் திங்களாகிய சித்திரை
197	17	நாற்பத்தாறாந்திங்க ...	நாற்பத்தேழாந்திங்கள்
198	31,32	இவ்வைகாசித்திங்களுக்கும் அடுத்துவந்த சித்திரைத்திங்களுக்கும் இடையிலமைந்த பதினொருதிங்களுக்குள்ளே ...	இவ்வைகாசித் திங்கள் முதல் அடுத்துவந்த சித்திரைத்திங்கள் இறுதியாகவுள்ள பன்னிரண்டு திங்கள் வரையிலும் உள்ள திங்களிலே
229	25,26	இருபத்தைந்தாந்திங்களிலும் அறுபதாந்திங்களிலும் ...	முப்பத்துநான்காந் திங்களிலும் அறுபத்தொன்றாந் திங்களிலும்

இங்ஙனம்,

நவநீதகிருஷ்ணன்.

914. சுரும்பேய்க்கும் வாட்கண்ணி பங்காளர் கண்கொண்டு சுட்டுவிட்ட
பெரும்பேய்க்கு வேப்பிலைக் காப்புத வாய்பிணர் சேர்பசுங்கோங்
கரும்பேய்க்கு மென்முலை யாரமு தூட்டி யடர்ந்துகொல்லு
வரும்பேய்க்கு வானுத வுங்குல சேகர மன்னவனே.

915. சடம்பழுக் குங்கிழட் டுக்குரு கீர்தலை சாய்த்துநின் று
முடம்பழுக் குங்கைதை நற்றுறை யிற்றெங்கு முப்புடைக்காய்
குடம்பழுக் குங்கொற்கை யான்குல சேகரன் கூடலிலென்
னுடம்பழுக் குஞ்சிறை யும்பழி கார ருணர்ந்திலரே.

916. அலைகுளிப் பாட்டுஞ் சலராசி யேழு மடங்கவுண்டு
மலைகுளிப்பாட்ட வருங்கொண்டல்காடெவ்வர்மார்பில்வெள்வேற்
கொலைகுளிப்பாட்டுங்குலசேகரன்கொற்கைக் கொம்பின்கண்ணீர்
முலைகுளிப் பாட்டவன் றோவெம்மை நீர்விட்டு மூந்துவதே.

விக்கிரமபாண்டியன்.

917. சீர்கொண்ட வெள்ளாறு குருதிப் பெருக்கிற்
செவ்வாறு பட்டோட வவ்வாறு சென்றப்
போர்வென் றுணப்பேய் நடங்கண்ட தற்பின்
புலியூர் நடங்கண்ட புவனேக வீரா
பார்பண் டளந்துண்டொ ராலிற் கிடக்கும்
பச்சைப் பசுங்கொண்ட லேபற்ப நாபா
கார்கொண்ட நின்கையில் வேலுக்கு வற்றுங்
கடலல்ல வென்பேதை கண்டந்த கடலே.

918. மாறுபடு மன்னவர்தங் கைபூண்ட வாளிரும்பு
வேறுமவர் கால்பூண்டு விட்டதே—சீறிமிக
வேட்டந் திரிகளிற்று விக்கிரம பாண்டியன்றன்
நாட்டங் கடைசிவந்த நாள்.

919. மீனவற்கு விக்கிரம பாண்டியற்கு வேந்தரிடும்
யானை திருவுள்ளத் தேறுமோ—தானவரை
வென்றதல்ல மேனிநிறம் வெள்ளையல்ல செங்கனகக்
குன்றதல்ல நாலல்ல கோடு.

920. ஏந்து மருவி யிரவி புரவியின்முன்
பூந்துவலை வீசும் பொதியிலே—காந்துசின

(914—916) தனிப்பா. (917-918) சிதம்பரசாஸனம்; S. I. I. IV, No. 228. (919-420) சாஸனப்பாடல்கள்; செந்தமிழ். IV. பக்கம் 493-494.

வேணு டனைவென்ற விக்கிரம பாண்டியன்மெய்ப்
பூணாரம் பூண்டான் பொருப்பு.

921. புயலுந் தருவும் பொருகைப் புவனேக வீரபுனல்
வயலுந் தரளந் தருகொற்கை காவல வாரணப்போர்
முயலுங் கணபதி மொய்த்தசெஞ் சோதி முகத்திரண்டு
கயலுண் டெனுமது வேமுனி வாறிய காரணமே.

922. வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே—யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணொன்றும் வேய்வாய் பகை(?).

விக்கிரமபாண்டியன் செய்த மதுரைத் திருப்பணிகள்.

923. மட்டா ரலங்கல் புனைசோழன் விட்ட மதகளிற்றைக்
கட்டா ரழல்விழிச் சிங்கக் கணைதொட்டுக் காய்ந்தசொக்கர்க்
கட்டாலை மண்டப முண்டாக்கி னனல் லறந்தழைப்பப்
பட்டாபி டேகம் புனைகூடல் விக்ரம பாண்டியனே.

924. கல்லானை யானதை யெல்லாருங் காணக் கரும்புதந்த
எல்லாமும் வல்லசித் தர்க்குப்பொற் கோயி லினிதமைத்தான்
வல்லாரில் வல்லவன் சந்த்ரகு லேச மகாமன்னவன்
பல்லாரும் போற்ற வருகூடல் விக்ரம பாண்டியனே.

பராக்கிரமபாண்டியன்.

("சார்வபௌமன் பாண்டியன்வாசலில்வந்து அவன்புறப்படவில்லை யென்று பழியாகப் பாதிபாடி, அவன் வந்து வணங்கப் புகழாகப் பாதி பாடியது")

925. எண்ணீர்மை நூலுக் ககத்திய னாமிவ னென்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல விக்ரம மாறன்செஞ்சொற்
பண்ணீர்மை தேரும் பராக்ரம மாறன் பதங்கழுவுந்
தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோனி தமிழ்கற்றதே.

926. வடிவைத்த வேல்வல்ல வையர் தொழநின்ற மாறன்முன்னாட்
படிவைத்த வுந்திப் பராக்ரம பாண்டியன் பார்புரக்க
முடிவைத்த பின்பு பராசர் தங்கண் முறைமைவிட்டுக்
குடிவைத் தனர்வெய்ய கானிலும் வானிலும் குன்றிலுமே.

(921—922) சாஸனப்பாடல்கள்; செந்தமிழ். IV, பக். 493—494. (923-924) மதுரைத்திருப்பணிமாலை. 10, 11. (925) தமிழ்நா. 147. (926) மதுரைச் சொக்கநாதர்கோயில் மேலைக்கோபுரத்துக் கண்ட சாஸனப்பாட்டு.

927. கடந்தூங்கும் வேழப் பிடர்க்கே வரக்கண்டு கண்கண்முத்து
வடந்தூங்க [1]வாடு மயிற்கென்செய் கேன்பல வாய்கடோறும்
விடந்தூங்கு பாம்பின் [2]படத்தே யுறுத்தி மிதித்தொருகாற்
படந்தூங்க வாடும் புயலே பராக்ரம பாண்டியனே.

928. சரராசி சம்பு வயிரியென் மாது சரீரமெல்லாம்
பொரரா சரத்துக் கிவள்பொரு ளோபசும் பொற்கிரண
சுரராச திவ்ய கிரீட விபாடத் தொடித்தடக்கைப்
பரராச ராவண ராமா பராக்ரம பாண்டியனே.

929. காளை முனைற்குல மெல்லாம் விலங்கு கடிந்திட்டநீ
வேளையு மப்படிச் செய்திலை யேவிளை நெல்வயலில்
வாளை குதித்து வளர்பூங் கமுகின் மடலொடியப்
பாளை முறிக்குந் துறைவா பராக்ரம பாண்டியனே.

930. ஆர்க்குங் குளிரு நிலவுயர் கோனின் னலங்கல்பெரு
வார்க்குங் குமமுலை யாட்கன லாகும் வடக்குந்தெற்கும்
மேற்குங் கிழக்கு மொருவெளுப் பாய்நின்று விண்ணையெட்டிப்
பார்க்கும் புகழுக் கிறைவா பராக்ரம பாண்டியனே.

931. கூரம் பொறுத்த விழியாள் கதலிக் குருத்திலிட்ட
ஈரம் பொறுக்க வறிந்தில ளேயிந்த்ர னிட்டசெம்பொ
னாரம் பொறுத்த புயமீதி லாயிர நாவுரக
பாரம் பொறுத்த புயலே பராக்ரம பாண்டியனே.

932. காம்பு வனம்புக்க தோளாட்கு நின்றன் கழுத்திலிட்ட
வேம்பு தனக்கும் விதியில்லை யோவெகுண் டாய்ச்சியர்கள்
தாம்பி னடிக்க வுரலோடு கட்டத் தடைப்பட்டுச்சிப்
பாம்பி னடிக்கின்ற மாலே பராக்ர பாண்டியனே.

933. ஒருவா னுதல்பண் ளெங்களிக்க வுயர்வான் முகடு கிழித்தெழுந்து
மருவார் தருவின் மரங்கொணர்ந்த மதுரை வடிவே [3]லதிதீரா
அரவார் வேம்பின் பசுங்கண்ணி யந்தி யிறைவிக் கருளென்று
இரவா விருக்க நீயளித்தற் கிரங்கா திருந்தா யிதுநாளே.

பராக்கிரமபாண்டியன்செய்த திருப்பணி.

934. சிரமேவு கங்கை யணிசொக்க நாதர்க்குச் சீர்பெறவே
உரகா திபனுறை பாதலம் பேதித் துவானங்கட்டித்

---

(927) தஞ்சைச் சரச்சுவதிமால் பிரதி: [1]வாடுங் கிளிக்கென்செய் கேன்மணி வாய்திறக்க. [2]படத்தின் மிசைதிமி தித்தியென. (928—933) தனிப்பா. [3]லதிவீரா; இப்பாடத்தால், அதிவீரராமபாண்டியனுக்குரியதாக இச்செய்யுள் அமையும். (934) மதுரைத்திருப்பணிமாலை. 12.

திரமேவு மேரு வெனக்கோ புரமேற் றிசையமைத்தான்
பராசர் நாளும் பணியும் பராக்ரம பாண்டியனே.

935. ஆலி னிலைக்கு ளடங்கிய மாய னவனியெல்லாம்
சேலி லடக்கிய செண்பக மாறன்றெவ் வேந்தர் தம்மை
வேலி லடக்கிய வையந் தொழுதென்னன் மீண்டுமுன்னைக்
காலி லடக்குவன் காணத் தருங்கொழி கார்க்கடலே.

936. வெறிக்குங் குமக்கொங்கை மீதே யிளம்பிறை வெள்ளைநிலா
எறிக்கும் பொழுதவந் தாயிலை யேயிலங் காபுரியைக்
குறிக்கின்ற ராவணன் பொன்முடி பத்துங் குரங்கைவிட்டுப்
பறிக்கின்ற சண்பக மாறு பராக்ரம பாண்டியனே.

937. மற்றொப் பிலாக்கொடைச் செண்பக மாற வரோதயநின்
வெற்றிக் கிரண்டுண் டடங்காத காரிய மேருகிரிச்
சுற்றுக்குங் கீர்த்தி யடங்காது நின்னுடைத் தோடழுலாக்
கற்றைக் குழலிக்கு மாலடங் காதிது கைகண்டதே.

அரிகேசரி—பராக்கிரமபாண்டியன் மெய்க்கீர்த்தி.

938. பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசைக் கலைமக ளலமுற விளங்கப்
புயவரை மீது சயமகள் புணரக்
கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச்
சந்திர குலத்து வந்தவ தரித்து
முந்தையோர் தவத்து முளையென வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து
சங்கர சரண பங்கயஞ் சூடிச்
செங்கோ லோச்சி வெண்குடை நிழற்றி
வான வாரியு மன்னருள் வாரியும்
தான வாரியுந் தப்பா தளித்து
மறக்களை பறித்துநல் லறப்பயிர் விளைத்துச்
சிங்கையி லனுரையி லிராசையிற் செண்பையில்
விந்தையி லறந்தையின் முதலையில் வீரையில்
வைப்பாற்......மன்னரை வெந்கண்
டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப்

---

(935) சாஸனப்பாட்டு; செந்தமிழ், தொகுதி, 4. பக். 494.
(936—937) தனிப்பா. (938) T. A. S. I, P. 91.

பதினெண் பாடைப் பார்த்திவ ரனைவரும்
திறையுஞ் சின்னமு முறைமுறை கொணர்ந்து
குறைபல விரந்து குரைகழ லிறைஞ்ச
அவரவர் வேண்டிய தவரவர்க் கருளி
அந்தண ரனேகர் செந்தழ லோம்ப
விந்தைமுத லகர மைந்திடத் தியற்றிச்
சிவநெறி யோங்கச் சிவார்ச்சனை புரிந்து
மருதூ ரவர்க்கு மண்டப மமைத்து
முன்னொரு நூறு மூங்கில்புக் கிருந்த
சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப்
பொற்கலத் தமுது பொலிவித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி
விழாவணி நடாத்தி விரைப்புன லாடல்
வழாவகை நடாத்தநின் மன்னரு ளதனால்
வற்றா வருவியும் வற்றி வற்கடம்
உற்றவிக் காலத் தூறுபுன னல்கென
வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச்
சேண்டரு புனலிற் செழும்புன லாட்டி
மின்கால் வேணி விசுவநா தர்க்குத்
தென்கா சிப்பெருங் கோயில் செய்து
நல்லா கமவழி நைமித் திகமுடன்
எல்லாப் பூசையு மெக்கோ யிலினும்
பொருண்முத லனைத்தும் புரையற நடாத்தித்
திருமலி செம்பொற் சிங்கா சனமிசை
உலக முழுது முடையா ளுடனே
இலகு கருணை யிரண்டுரு வென்ன
அம்மையு மப்பனு மாயனைத் துயிர்க்கும்
இம்மைப் பயனு மறுமைக் குறுதியும்
மேம்பட நல்கி வீற்றிருந் தருளிய
ஸ்ரீ அரிகேசரி பராக்கிரம தேவர்க்கு யாண்டு.—

939. அன்பினுடன் சகாத்தமா யிரத்து மூந்நூற்
றறுபத்தெட் டதன்மேல்வை காசித் திங்கள்
மன்றியதி யீரைந்திற் பூர்வ பக்க
மருவுதச மியில்வெள்ளி வாரந் தன்னில்

(939) T. A. S. I. P. 91.

மின்றிகழுத் தரநாண்மீ னத்தில் வாகை
வேலரிகே சரிபராக் ரமம கீபன்
தென்றிசையிற் காசிநகர்க் கோயில் காணச்
சென்று நின்று கருடனைதான் செய்வித் தானே.

940. பன்னுகலி யுகநாலா யிரத்தைஞ் ஞூற்றைம்
பத்தெட்டின் மேலெவரும் பணிந்து போற்றச்
செந்நெல்வயற் றென்காசி நகரி னற்கார்த்
திகைத்திங்கட் டியதியைந்திற் செம்பொன் வார
மன்னியமார் கழிநாளின் மதுரை வேந்தன்
வடிவெழுதொ ணாதபராக் ரமம கீபன்
சொன்னவரை போற்றிருக்கோ புரமுங் காணத்
துடியிடையா யுபான முதற் றுடங்கினனே.

941. மென்காசை மாமல ரன்னமெய் யோற்கும் விரிஞ்சனுக்கும்
வன்காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்
பொன்காசை மெய்யென்று தேடிப் புதைக்குமிப் பூதலத்துத்
தென்காசி கண்ட பெருமாள் பராக்ரமத் தென்னவனே.

942. ஓங்கு நிலையொன்ப துற்றதிருக் கோபுரமும்
பாங்குபதி னொன்று பயிறூணுந்—தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து.

943. அணிகொண்ட விந்த வணங்குமொன் றேயடி யேற்குனக்கு
மணிகொண்ட வாசன் மணியுமொன் றேபகை மன்னரையும்
பிணிகொண்ட காரையு முந்நீ ரையும்பெரும் பூதத்தையும்
பணிகொண்ட செண்பகத் தென்னு பராக்ரம பாண்டியனே.

பராக்கிரமபாண்டியன் தென்காசிக் கோயில்கண்டு பாடியவை.

944. ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே.

945. அரிகே சரிமன் பராக்ரம மாற னரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்

(940—941) T. A. S. I. P. 91. (942—945) செந்தமிழ்த்தொகுதி 4. தென்காசிச்சாஸனப்பகுதி.

புரிசேர் கடற்புவி போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாதமென் சென்னியதே.

946. சாத்திரம் பார்த்திங்ஙன் யான்கண்ட பூசைக டாநடத்தி
ஏத்தியன் பால்விசுவ நாதன்பொற் கோயிலென் றும்புரக்கப்
பார்த்திவன் கொற்கைப் பராக்ரம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கு மடைக்கலங் கூறினனே.

947. சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்னம்
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்ரம பாண்டியனே.

948. மனத்தால் வகுக்கவு மெட்டாத கோயில் வகுக்கமுன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்றென் காசியை யென்றுமண்
ணினைத்தா தரஞ்செய்தங் காவல்புனை யு நிருபர்பதந் [மேல்
தனைத்தா னிறைஞ்சித் தலைமீதி யானுந் தரித்தனனே.

949. பூந்தண் பொழில்புடை சூழுந்தென் காசியைப் பூதலத்திற்
றூந்தங் கிளையுட னேபுரப் பார்கள்செந் தாமரையாள்
காந்தன் பராக்ரமக் கைதவன் மான கவசன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந் நாளும் விளங்குவரே.

பராக்கிரமபாண்டியன் சிவபதமடைந்தது.

950. காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
றூண்டின் முடித்துக் கயிலைசென் றுனகி லேசர்பதம்
பூண்டுறை சிந்தை யரிகே சரிவிந்தைப் போர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்ரம பாண்டியனே.

951. கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
நீதற்ற வெள்ளிச் சிலம்பகத் தோசெம்பொ னம்பலத்தோ
வேதத்தி லோசிவ லோகத்தி லோவிசுவ நாதனிரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்ரம பாண்டியனே.

952. ஏரார் சகாத்தமூந் நூற்றுட னாயிரத் தெண்பத் தைஞ்சிற்
சீராரு மார்கழிச் சித்திரை நாளிற் சிறந்துகுற்றம்
வாராத பூர ணையினிற் பராக்ரம மாறனெங்கோன்
[காராருங் கண்டத் தரன்கயி லாயந்தான் கண்டனனே?]

(946—952) செந்தமிழ்த்தொகுதி 4. தென்காசிச் சாஸனப்பகுதி.

வீரவேள் குலசேகரபாண்டியன் முடிசூடியகாலம்.

953. ஏறிய சகாத்தமா யிரத்துநானூற் றெழுபஃ
    தியனுலி லாண்டுபரி தாபிதனின் மாதந்
தேறியசித் திரையிலிரு பத்தொன்ப தாகுந்
    தேதியிரண் டாம்பக்கந் திங்களுரோ கணிநாள்
வீறுயர்ந்த மிதுனத்து நெல்வேலி மாறன்
    வீரவேள் குலசேக ரச்செழிய னென்றும்
ஆறுபுனை யகிலேசர் காசியிலே விளங்க
    வணிமௌலி தரித்தனன்பா ரரசர்பணிந் தனரே.

954. எடியன் மாலை யணிந்தாலும் வாடு மெனப்புலவர்
பாடிய வீரவெண் பாமாலை யைப்பொன்னின் பாண்டியன்போர்
தேடியவேற் செழியன்குல சேகரத் தென்னனைப்போற்
சூடிய வேந்தருண் டோவொரு வேந்தரைச் சொல்லுகிலே.

955. விண்ணுடர் போற்றுந்தென் காசிப்பொற் கோபுர மீதிலெங்கள்
அண்ணாள்வி செய்த பணியிப் படிக்குறை யாய்க்கிடக்க
ஒண்ணா தெனக்கண் டுயர்ந்ததட் டோடெங்கு மூன்றுவித்தான்
மண்ணாளு மாலழ கன்குல சேகர மன்னவனே.

சீவலவேள்மாறன் முடிசூடிய காலம்.

956. சகன்கால மாயிரத்து நானூற்றெண் பத்தாறிற் சலதி சூழ்ந்த
செகங்காண விரத்தாக்ஷி சித்திரையி லிருபதாந் தேதி வேந்தர்
புகழ்ந்தேவல் செய்பூர்வ திதியாறின் முதல்வாரம் புனர்பூ சத்திற்
சுகந்தாதி புனையழகன் சீவலவே ளெனமகுடஞ் சூடினானே.

அதிவீரராமபாண்டியன்.

957. அத்தர்தென் காசிகண் டோன்கண்ட வாலயமு
    மடியாரும் வாழ்வு பெறவந்
தழகனதி வீரரா மன்சருவ மானியம
    தாகக் கொடுத்த படிதான்
சித்திரைப் பரணியூர்த் தெண்டதோ டப்பொன்
    திரும்பக் கொடுத்த வூரிற்
செங்கோட்டை யார்கொண்ட பகுதியு மிறுத்தித்
    திருக்கோயி லிற்பகுதியாய்

(953—957) செந்தமிழ்த்தொகுதி 4. தென்காசிச்சாஸனப்பகுதி,

வைத்ததை யறக்கழித் தாயங் கணக்குடன்
மகாநவமி திருநாளிடை
வந்த காணிக்கைபாட் டப்பகுதி காணம்பல்
வரியிவைமெ லாங்கழித்துப்
பத்தியாய்க் குணராம நாதர்க்கு மேற்படி
பணங்கழித் தடியர்வீட்டுப்
பணமுங் கழித்துப் படிசசருவ மாணியப்
பட்டயமு மருளி னனே.

வீரபாண்டியன் முடிசூடியகாலம்.

958. நண்புற் றெதிர்ந்தகலி நாலா யிரத்தறுநூற்
றெண்பத்தொன் பானி லிருங்கடல்சூழ்—மண்பெற்று
மின்னுமகு டம்புனைந்தான் வேல்வீர மாறனென
மன்னவர்கோ மானபிரா மன்.

வீரபாண்டியன் முடிசூட்டுநாட் காசிக்கலியன்கவிராயன் பாடிய மங்கலம்.

(நாண்மஙகலம்).

959. சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடைப்
பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட
கானுலா மாலைக் கனகமகு டம்புனைந்தான்
மானவே லானபிரா மன்.

(குடைமங்கலம்).

960. சேனுலவு வெண்டிங்கட் செல்வனெனத் தண்ணென்று
நீணிலமோ ரேழு நிழற்றுமே—பேணிவந்து
பூவேந்த ரேத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை.

(வாண்மங்கலம்).

961. பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூருமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

(958—961) T. A. S. I., 115—6.

962. கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்
மற்றடந்தோள் வேல்வீர மாறனுக்குச்—சொற்புனைந்தான
நாண்மங் கலமு நவிற்றுகுடை மங்கலமும்
வாண்மங் கலமும் வகுத்து.

(வாணன்) நாலுதாதியரைப் பாண்டியன்மாலை வாங்கிக்கோவோ அனுப்ப அவர் பாடியவை.

963. தென்னவா மீனவா சீவலமா றுமதுரை
மன்னவா பாண்டி வரராமா—முன்னஞ்
சுரும்புக்குத் தாரளித்த தூயதமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலே கண்.

964. மாப்பைந்தார்ச் சல்லமுத்து வண்ணத்தார்க் கல்லவஞ்சி
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு நெல்வேலிச் சீவலமா றுதமிழை
ஆய்ந்திருக்கும் வீரமா று.

965. வேம்பா கினுமினிய சொல்லிக்கு நீபயந்த
வேம்பா யினுமுதவ வேண்டாவோ—தேம்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள் மான்.

"இந்த மூன்றுகவிக்கும் மாலைகோடானுகப் பின்னெருத்தி பாடியது."

966. இலகு புகழாறை யேகம்ப வாணன்
அலகை வரும்வரு மென்றஞ்சி—யுலகறிய
வானவர்கோன் சென்னியின்மேல் வண்ண வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு.

[["இதுகேட்டு மாலை கொடுத்தான்"]

967. நடந்த தெங்குநின் றெங்கின நடப்பது
நம்மையோ கமலத்து
மடந்தை யென்பது வந்தது வரவொரு
வாசகந் தந்தாலோ
கடந்த ருங்களிற் றண்ணல்சி வலவனற்
களவழி நன்றூட்டிற்

(962) T. A. S. I., 115—6. (963—966) தமிழ்நா, 179—82, (967) இறையனார்களவியல் மேற்கோள்விளக்கம்,

றுடர்ந்து வண்டினம் பின்வர முன்வருந்
துடியிடை மடவீரே.

968. பூணித் திலத்துப் புயல்வீர மாறன் புகல்கவிக்கு
நாணிப் புலவர்செல் லாதென்செய் வாரிந்த நானிலத்தில்
ஆணிக் கனக மணந்தரிற் பூமணம் யார்கொள்ளுவார்
மாணிக்கந் தித்திக்கி னென்னுரு மற்ற மதுரங்களே.

969. மங்கலமங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வின ராயதிலே
திங்களணி மறைந்துவருஞ் சேயிழை யார்நடைபோல்
தென்ற லசைந்துவருஞ் செந்தமிழ் நாடுடையாய்
கங்கையி னன்கொழுநா காவிரியின் கணவா
கன்னித னுயகமே சென்னிந லுடையாய்
எங்க ளிளங்கொடிதா னுங்க ளிளம்பிறையால்
எத்தனை கோடியிரா யிப்படி வாடுவதே.

பல்லவர்.

பல்லவன் வடுகர்முனையிற் பல்லா கவர்ந்தது.

970. முலைபொழி தீம்பான் மண்சேறு படுப்ப
மலர்தலை யுலக மோம்பு மென்ப
பரிசிலைத் தொண்டைப் பல்லவ னுணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழவர்
பொருந்தா வடுகர் முனைச்சுரங்
கடந்து கொண்ட பல்லா நிரையே.

கச்சியார்கோ-சிங்கன்.

(சிறப்பில் கலித்தாழிசை).

971. நிலமகள் கேள்வனு நேர்கழலி னுனும்
நலமிகு கச்சியார் கோவென்பவே
நலமிகு கச்சியார் கோவாயி னுனும்
சிலைமிகு தோட்சிங்க னவனென்பவே
செருவிடை யானை யவனென்பவே.

---

(968) தனிப்பா. (969) தஞ்சைச் சரச்சுவதிமால்பிரதியிற் கண்டது. (970) தொல். அகத். 54. (971) யாப். வி. 87.

மகேந்திரபல்லவன்.

972. தொண்டையந்தார் வேந்தன் சுரேந்திரப் போத்தரையன்
வெண்கோட்டின் றென்பான் மிகமகிழ்ந்து—கண்டான்
சூழமிக்க வெஞ்சிலையான் சத்துமல்லே சம்மென்
றானுக் கிடமாக வன்று.

நந்தி.

973. கரைபொருநீர்க் கடல்கலங்கக் கருவரைமத் ததுவாகத்
திரைபொருது புடைபெயரத் திண்டோளாற் கடைந்தனையே;
முகில்பொரு துடல்கலங்க முழவுத்தோள் புடைபெயர
அகல்விசும்பி னமரர்க்கு மாரமுதம் படைத்தனையே;
வரைபெரிய மத்தாக வாளரவங் கயிறாகத்
திரையிரியக் கடல்கடைந்து திருமகளைப் படைத்தனையே; **(தாழிசை)**

அமரரை யமரிடை யமருல கதுவிட
நுமரது புகழ்மிக மிகவிக லடுத்தனை; **(அராகம்)**

அலைகட லுலகமு மந்தணர்க் கீந்தனை;
உலகொடு நிலவிய வொருபுகழ் சுமந்தனை; **(பேரெண்)**

ஆதிக்க ணரசெய்தினை;
நீதிக்கண் மதிநிரம்பினை;
விளங்கெரி முதல்வேட்டனை;
துளங்கெரியவர் புகழ்துளக்கினை; **(இடையெண்)**

அலகு நீ; உலகு நீ; அருளு நீ; பொருளு நீ;
நிலவு நீ; வெயிலு நீ; நிழலு நீ; நீரு நீ; **(அளவெண்)**

எனவாங்கு—தனிச்சொல்.

பவள மெறிதிரைப் [1]பாகைக் கோவே
புகழ்துறை நிறைந்த பொருவேல் நந்தி
உலகுட னளந்தனை நீயே
உலகொடு நிலவுமதி யுதையவரை யொத்தே. **(சுரிதகம்)**

அச்சுதநந்தி.

974. அகலிடமு மமருலகு மமர்பொருது மறந்தோற்றுப்
புகலிடநின் குடைநிழலாப் புகுமரணம் பிறிதின்றி
மறந்தோற்று நிறங்கருகி மால்புகழு நிலைதளரப்

---

(972) தளவனூர்க் குகைச் சாஸனம். (973—74) யாப். வி. 86.
[1]பாவைக்; பாதைக்.

புறந்தோற்றுக் கழலார்ப்பப் பொருதகளம் வெறிதாக
மண்ணுலகு மறிகடலு மாமலையு நிலைகலங்க
விண்ணுலகம் வியப்பெய்த வெஞ்சமத்து ளலைத்தனையே;
அதனால்,

கனைகட லுடைதிரை கரைபொரக் கடைந்தனை;
முனைவரு மமரரு முறைமுறை வந்துநின்
இணைமலர் பலர்புகழ் பயில்வதொர் பண்பினை;

மருளறு துதைகதிர் மணியது மணிநிற மருளுநின்குடை;
குடையது குளிர்நிழ லடைகுனவுயிர்களை யளிக்கு நின்கோல்;
கோலது செம்மையிற் குரைகடல் வளாகம்
மாலையுங் காலையு மகிழ்தூங் கின்று; (அராகம்)

ஆருயிர்க் கெல்லா மமிழ்தின் றமையா
நீரினு மினிது நின்னருள்;
அருளு மலைகடலு மாயிரண்டு மொக்கும்
இருள்கொடிமேற் கொண்டாய்(?) நினக்கு; (பேரெண்)

நீர்நிலங் காத்தோய்நீ; நிலவுலக மீந்தோய்நீ;
போரமர்க் கடந்தோய்நீ; புனையெரிமுன் வேட்டோய்நீ;
ஒற்றைவெண் குடையோய்நீ; கொற்றச்செங் கோலோய்நீ
பாரையந் துறைவனீ; பரியவ ரிறைவனீ; (சிற்றெண்)

எனவாங்கு—(தனிச்சொல்).
பொருகுடை வளாக மொருகுடை நிழற்றி
இருபிறப் பாளர்க் கிருநிதி யீந்து
மனமகிழ்ந்
தருள்புரி பெரும்புக ழச்சுத கோவே
இனைய யாதலிற் பனிமதி தவழும்
நந்தி மாமலைச் சிலம்ப
நந்திநிற் பரவுத லுலர்க் கரிதே. (சுரிதகம்)

975. செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீத
சந்தனமென் றூறோ தடவினர்—பைந்தமிழை
ஆய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மேல்.

976. திருத்தேர் புகழ்நந்தி தேசபண் டாரிதெள் ளாறைவெற்பில்
மருத்தேர் குழலிக்குக் கார்முந்து மாகின் மகுடரத்னப்

(975—76) நந்திக்கலம்பகம்.

பரித்தேரும் பாகனு மென்பட்ட வோவென்று பங்கயக்கை
நெரித்தே வயிற்றில்வைத் தேங்கிற்ப ளேவஞ்சி நெஞ்சுலர்ந்தே.

977. வானுறு மதியை யடைந்ததுன் வதனம்
வையக மடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை யடைந்ததுன் வீரம்
கற்பக மடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலரா ளரியிடஞ் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென் கலியு மெவ்விடம் புகுவே
மெந்தையே நந்திநா யகனே.

தொண்டைமான்.

தொண்டைமா னிளந்திரையன்.

978. கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

பொய்கையார்பாட்டு.

979. ஆழி யிழைப்பப் பகல்போ [1]மிரவரிற்
றேழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை தாராய் திரையவோ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போழ்து.

980. பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற் றிருந்த புலவீர்காள் பாடுகோ
ஞாயிற் றொளியான் மதிநிழற்றே தொண்டையார்
கோவீற் றிருந்த குடை.

சிற்றரசர்.

981. வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்குஞ்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந் தாங்குஞ் செகமுழுதுந் தாங்கும்
அறந்தாங்குந் தொண்டை யரசு.

---

(977) நந்திக்கலம்பகம். (978) பெரும்பாண். இறுதி. (979) யாப். வி. 4. 96. [1]மிரவெல்லாந். (980) யாப். வி. 51. (981) தனிப்பா.

982. ஊடைகூட் டெண்ணு முகுபனி யாமத்தெங்
கோதைகூட் டெண்ணிய தான்யார்மன்—போதெல்லாந்
தாதோடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
தூதோடும் வாராத வண்டு.

அதிகமானை ஔவையார் நெல்லிக்கனி கொடுத்ததைச் சிறப்பித்துப் பாடியது.

983. பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய் வாளதிகா [1]வன்கூற்றை நாவை
அறுப்பித்தா யாமலகந் தந்து.

காரி.

(வெண்டளையான்வந்த ஆசிரியநேர்த்துறை.)

984. கண்ணியோர் [2]கண்ணி வலத்தசைத்த காரி
கமழ்தண்டார் காமம் புனைபவே காரி
பண்ணியோர் [3]பாட லெழுப்பண்ணி காரி
[4]பணைமுழவஞ் சீர்தயங்கப் பாடானோ காரி
சீர்தயங்கத் தார்தயங்கச் செய்யாத செய்திவள்
நீர்தயங்கு கண்ணினளாய் நிற்கவோ காரி
நினக்கினியார்க் கெல்லாமி னையையோ காரி.

பாரி, காரி.

985. ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை – காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தானாணுந் தோளாள்
நிறனுள்ளூ ருள்ள தலர்.

பாரி, அஞ்சி.

986. தடங்கடன் மண்ணிற் றருமருள் விரும்பிய
சின்மென் கிளவித் தெய்வப் பாரியும்
இல்லை யாகிய திரவலர் வினையெனத்

---

(982) பி. வி. 42. உரை. (983) தமிழ்நா. 21. [1]வன்கூற்றி னாவை. (984) யாப். வி. 76. [2]கண்ணே. [3]பாட னொழுப்பண்ணி. [4]பணைமுழவின். (985) யாப். வி. 94; தொல். செய். 210 நச்; யாப். கா. ஒழி. 8. (986) யாப். வி. 95.

தன்னுடன் பொத்திய தாசிடு சிதவ லு
மடுத்த மெய்யள், கடைத்தலை முன்சனத்
தீவது நோக்கி (?)
ஏனை மூனைகெட வேவிய வெட்சி
சால்பிற்றந் தோ(?)லா தாங்கே மதிநிலை
வென்றி வேழ மிகுதி பாடி
நின்றனள் விறலி நெருந லின்(றே)
அஞ்சி பாடிய வ்வை போல
வறுமை யுற்ற சிறுமை மூதுரை
தணந்து மிக்க தழற்பொலி திருமணி
யணிந்தரைத்(?) துஞ்ச வல்லிநின் றேனே.

நன்னன்.

987\. தூஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்
மாஅ மிசையான்கோ னன்ன னறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு.

அழிசி.

988\. ஆளான் விடுமே யழிசிகோட் டன்றெதிர்ந்தார்
தாளார் கருங்களிற்றுத் தார்வீக்க—வாளான்
உலகவா மெங்கோன தோங்கொளிபோற் சோதி
விலகாவாம் பல்கதிரோன் விண்.

நல்லியக்கோடன்.

989\. அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப—மணிமிடைபூ
ணிம்மென் முழவி னெயிற்பட் டினநாதன்
செம்மல் சிலைபொருத தோள்.

990\. நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமெடும் பாம்பேர் மருங்கு—[1]விடுகொடி
யோடிய [2]மார்ப னுயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்.

---

(987) பத். ஈலைபடுகெடாத்திறுதி; தொல். பொருளதி. 374 மேற். (988) யாப். வி. 95. (989-990) பத். சிறுபாண். இறுதி. [1]இடுகிடையாய். [2]மார்பின்.